
# சாணக்கியன்

# CHANAKYAN

இலக்கியம் என்பது மனித விழுமியங்களை வலியுறுத்தும் பொக்கிஷம்





இலங்கையில் இருந்து வெளிவரும் கலை, கலாச்சாரம், பண்பாடு பாரம்பரிய பல்சுவை இலக்கியம் * இதழ் 4

கவிக்குயில் சரோஜினி தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணக்கியன்

## (Chanakyan)

சஞ்சிகை

ஆசிரியர்

வயலற் சரோஜா

B.Com - Dip.in.Ed - M.Com(Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கியம் என்பது மனித விழுமியங்களை வலியுறுத்தும் பொக்கிஷம்.**


**இதழ் - 04**

**சாணக்கியன்** (தோற்றம்–2011)

**"சத்திரியனாக இருப்பதைவிட சாணக்கியனாக இரு"**



ஆசிரியர் – வயலற்சரோஜா
B.Com- Dip - in. Ed- M.Com (Hons)
தொ-பேசி - 0775116137

தொடர்பு முகவரி:-
**திருமதி. வயலற் சந்திரசேகரம்,**
1295/1 பாலையூற்று
திருகோணமலை.

Contact
**Mrs. Violet Chandrasegaram.**
1295/1 Paliyoothu
Trincomalee


ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.

**"சாணக்கியனின்" அறிவுப் பகிர்வுக்கு அன்பளிப்பு செய்ய விரும்பும், அறிஞர்கள், மேதைகள், நலன் விரும்பிகள் (ஊக்குவிக்கும் கரங்கள்) தாங்கள் அன்பளிப்புச் செய்யும் தொகையை ஆசிரியரிடம் நேரிற்தரலாம், அல்லது இலங்கை வங்கி (நகரக்கிளை) பஷார் பிறாஞ் திருகோணமலை சேமிப்புக் கணக்கு இலக்கம் 1731217ல் வைப்பிலிட லாம். அல்லது அஞ்சல் அலுவலகம் திருகோணமலையில் மாற்றக் கூடியவாறு காசுக் கட்டளையை அனுப்பலாம். உங்கள் சேவைக்கு நன்றி**


**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**திரு. யு. சந்திரசேகரம்,**
**1295/1 பாலையூற்று,**

## உள்ளே ......


1. ஆசிரியர் பக்கம் 03
2. யார் இந்த சாணக்கியன் 04
3. யார் பெரியவன் (குறுங்கதை) 08
4. மகாபாரதத்தில் கிருஷ்ணரின்... 10
5. சாதனைப்பெண் வரிசையில் சரோஜினிதேவி 13
6. நீர் ஊற்றுவோம் (கவிதை) 18
7. சர்வாதிகாரச் சாரல்கள் 20
8. மறுபக்கங்கள் (சிறுகதை) 21
9. போதை அடிமையின் புலம்பல்கள் (கவிதை) 26
10. முக்கிய இலக்கியங்களில் துணைவியர் 27
11. இரும்புப் பெண்மணி 32
12. சாதனைகளுக்குக் காரணம் சந்தர்ப்பமா? முயற்சியா? 34
13. நட்பு என்றால் நட்புத்தான். 39
14. தீவிரவாதம் வளரக் காரணம் என்ன? 43
15. கொலஸ்ட்ரோலில் இருந்து...... 47
16. உண்மையை உள்ளபடி உரைக்கும் எழுத்தாளர் 51
17. முதலாம் எண்களிற் பிறந்தோர். 53
18. சிரி......... சிரி....... சிரி........ 58
19. சாணக்கியர் பதிலளிக்கிறார். 61




# ஆசிரியர் இதயத்தில் இருந்து..........



தண்டா மரையின் உடன்பிறந்தும்
தண்தேன் நுகரா மண்டுகம்
வண்டோ கானத்து இடையிருந்து
வந்தே கமல மது உண்ணும்
பண்டே பழகி இருந்தாலும்,
அறியார் புல்லர் நல்லோரைக்
கண்டே களித்து அங்கு உறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றாரே.

"**விவேகசிந்தாமணி**"யில் இப்பாடல் இடம்பெறுகின்றது. இப்பாடலில் பொழிப்பு வருமாறு.

தாமரை பிறந்த இடத்திலேயே தவளையும் பிறந்தபோதும், தாமரையிலுள்ள தேனின் அருமை அறிந்து அதனை உண்ணும் இயல்பு பெற்றிருக்கவில்லை. ஆயினும்: வண்டானது காட்டிலிருந்து வந்து அத்தேனை உண்ணும். அதுபோல அறிவீனர்கள் பல காலமாக நல்லவர்களோடு பழகியிருந்தாலும், அவருடைய அருமை, பெருமைகளை அறியமாட்டார்கள், ஆயினும் கற்றோர் தேடி வந்து அவருடன் கலந்து இன்புறுவர், என்பதாகும்.

இவ்வாறுதான் இன்று அனேகமானோர், அறிவியல் நூல் பல அறிந்திருந்தும், அவற்றின் பெறுமதியை உணராது உதாசீனம் செய்துவிடுகிறார்கள். ஆனால் கற்றறிந்த பெரியோர்கள் இவ்வாறான நூல்களைத் தேடி ஓடிவந்து, அவற்றைப் படித்துப் பல்வேறு பயன்களைப் பெற்று இன்புறுகிறார்கள்....

**"கண்டது கற்கப் பண்டிதனாவாய்"**

ஆசிரியர்
வயலற் சரோஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ? யார் இந்த சாணக்கியன்?

**பயணம் தொடர்கிறது.......**

சாணக்கியனின் தந்தை சனகா! பதினாறு வயதான மகனை நோக்கி..... "மகனே! உன்னை நான் தட்சசீலம் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கு முடிவெடுத்துள்ளேன்". என்றார்.

"சரி தந்தையே"

"உனது மேற்படிப்பிற்கு அதுதான் மிகப்பொருத்தமான இடம்"

' உங்கள் உத்தரவு'. பணிவுடன் உரைத்தான், தந்தை என்ன சொன்னாலும் உடனே கேட்பதுதான் அவன் வழக்கம். "**தந்தை சொல் மிக்க மந்திரமில்லை**" என்றே விசுவாசிப்பான். தட்சசீலத்திற்குப் புறப்பட்டுவிட்டான் சாணக்கியன்.

இன்றைய பாகிஸ்தானின், ராவல்பிண்டியிலிருந்து, சுமார் முப்பது கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கிறது தட்சசீலம். அதாவது பழைய தட்சசீலத்தின் இடிபாடுகள், அன்றைக்கு அது கலைகளின் கோயில். காந்தாரம் என்று அந்நாளில் (இன்று ஆப்கானிஸ்தான்) அழைக்கப்பட்ட தேசத்தின் தலைநகரமாக விளங்கிய நகரமது.

உலகம் முழுவதிலும் இருந்து மாணவர்கள் தட்சசீலம் பல்கலைக் கழகத்திற்கு படிக்க வருவார்கள். அங்கு. அரசு நிர்வாகம், வீரக்கலைகள், அறிவியல், தத்துவம், ஆயுர்வேதம், மொழிஇலக்கணம், கணிதம், பொருளாதாரம், சோதிடம், புவியியல், வானவியல், அறுவைச் சிகிச்சை மருத்துவம், விவசாய அறிவியல், அம்பெய்தல் போன்ற பல்துறைக் கலைகளும் இங்கு போதிக்கப்படும்.

கிறிஸ்து பிறப்பிற்கு முன்பு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தட்சசீலம் பல்கலைக்கழகத்தில் ஒரு வகுப்பில் 101 இளவரசர்கள் ஒன்றாகப் படித்திருக்கிறார்கள். படித்து முடிந்ததும் அந்தந்த இளவரசர்கள் தங்கள் கல்லூரிக்குத் தம்மாலான உதவிகளைச் செய்வார்கள், அப்படித்தான் அது வளர்ந்தது.



அந்தப் புகழ்பூத்த பல்கலைக்கழகத்திற்கு படிப்பதற்குப் போனான் சாணக்கியன்.

35 மதிப்பெண்கள் எடுத்தால் பாஸ் என்னும் பல்லவிஎல்லாம் இங்கு கிடையாது. சொல்வதெழுதலும், பாடமாக்கலும், பரீட்சையும் என்ற நுணிப்புல்லறிவல்ல இங்கு போதிக்கப்படுவது. கலைகளில் நன்கு தேர்ச்சி பெறாமல் ஒருவர்கூட, தட்சசீலா பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுவது மிகமிகக் கடினம். அரைகுறை மாணவர்களால் தங்கள் பல்கலைக்கழகத்திற்கு இழுக்கு என்பதால் எந்தவிதமான சிபார்சுகளும் அங்கே ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒரு மாணவரின் ஆர்வத்தையும், முயற்சியையும் சோதிக்காமல் அனுமதி கிடைக்காது.

எப்பேர்ப்பட்ட இளவரசரானாலும்சரி, கெட்டிக்காரராக இருந்தால் மட்டுமே அங்கே அனுமதி கிடைக்கும்.

இன்னொரு முக்கிய விதி, இங்கு ஒருவர் கல்வி கற்கவேண்டு மென்றால் அவர் கட்டாயம் 16 வயதைக் கடந்திருக்கவேண்டும். கல்லூரிக் குள் நுழைந்த பிறகு அடுத்த எட்டு வருடங்களை அங்குதான் கழிக்க வேண்டும்.

24 வயது முடிந்து ஒரு மாணவன் தட்சசீலா பல்கலைக்கழகத்தை விட்டு வெளியே வரும்போது, வானுக்குக் கீழே அவனுக்குத் தெரியாதது என்று ஒன்றும் இருக்காதெனலாம். தட்சசீலம் பல்கலைக்கழகத்தில் பயின்றவன் என்றாலே அவன் ஒரு பெரிய மேதை என்கின்ற எண்ணம் எப்போதுமே எல்லா அறிஞர்கள், மேதைகள் மத்தியிற் காணப்படும்.

"மகனே,! நீ கற்றது கைமண்ணளவு. இனிமேல் என்னால் உனக்குக் கற்றுத்தர இதற்குமேல் ஒன்றுமில்லை. உனக்கு ஏற்ற இடம் தட்சசீலம் பல்கலைக்கழகந்தான். அங்கிருந்து நீ வெளியேறும் போது, முற்றும் கற்றறிந்த மகானாக வெளியே வருவாய்" என்றார் சனகா.

சாணக்கியன் பல்கலைக்கழகக் கற்கைநெறியை முடித்தபோது தந்தை எதிர்பார்த்தது போலவே, ஒரு மகாமேதையாகத்தான் உருவாகி யிருந்தான். பல்கலைக்கழகம் அவனை வெளியே விட விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாணக்கியரே,! நீங்கள் இங்கேயே இருந்து ஆசிரியராகப் பணியாற்றலாமே, எங்களுக்கும் இது பெருமையாக இருக்கும். உங்களுக்கும் இரு பொருத்தமான உத்தியோகமாக அமையும்" என்றது நிர்வாகம்.

நம்மில் அனேகமானவர்கள் சாணக்கியரை "அரசியல்வாதி" என்று மட்டுமே தப்புக்கணக்கு போட்டுவிட்டார்கள். அதீத நாட்டுப் பற்றுடன் இந்தியாவைக் காத்தவர் அவர், அவர் இல்லாதவிடத்து இந்தியாவின் சரித்திரமே தடம்மாறியிருக்கும்.

சாணக்கியர் பல்துறை ஆளுமைமிக்க அறிஞர், மேதை,...... அந்தக் காலத்திலேயே, "அர்த்த சாஸ்திரம்" என்ற நூலை எழுதிப் புகழ்பெற்றார் இந்நூல் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் புகழைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சாணக்கியர் கல்விகற்று முடிந்த காலகட்டத்தில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது. எல்லையை விரிவுபடுத்தும் பொருட்டு, ஆங்காங்கே பல போர்கள் நடைபெற்றதோடு சில மன்னர்கள் அதிக வரிகளை மக்கள்மீது சுமத்தி அவர்களைப் பாடாய்ப்படுத்தினர்.

வெளிநாட்டிலிருந்து ஒரு கொள்ளைக்கூட்டம் (பாரசீகர்கள்) இந்தியாவை விழுங்க வகைதேடினார்கள். கிரேக்கர் இந்தியாவிற்குள் எப்போது வேண்டுமானாலும் நுழையலாம் என்ற ஆபத்தும் நிலவியது.

பயமற்ற, பாதுகாப்பான, சுபீட்சமான வாழ்க்கை ஒன்றை எதிர்பார்த்து மக்கள் ஏங்கிக் கிடந்தார்கள். எங்குபார்த்தாலும் பசி, பட்டினி, கொள்ளை

பக்கத்து தேசமான பாடலிபுரத்தில் நந்தர்கள் வம்சத்தின் மன்னரான தனநந்தர் மக்களைத் துன்புறுத்தி ஆட்சிசெய்வதாகத் தகவல் வேறு சாணக்கியருக்குக் கிடைத்தது.

கி.மு. 6ம் நூற்றாண்டு தொடக்கத்தில் வட இந்தியாவில் எண்ணற்ற தனி அரசுகள் இருந்தன. சிலவற்றில் முடியாட்சி முறையும், சிலவற்றில் குடியாட்சி முறையும் வழக்கில் இருந்தன. ஆரம்பத்தில் 16 அரசுகள்



இந்தியாவை ஆண்டுவந்தன. காலப்போக்கில் சில அரசுகள் கவிழ்ந்தன. வலிமைமிக்க அரசுகள், சிறிய அரசுகளைக் கவிழ்த்து தன் குடையின் கீழ் கொண்டுவந்தன.

கி.மு. 6ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நான்கு அரசுகள் மட்டுமே எஞ்சியிருந்தன. வத்சம், அவந்தி, கோசலம், மகதம் என்பவை தான், இதில் மகதம் ராஜ்ஜியம் வலிமை மிகுந்த பேரரசாகத் திகழ்ந்தது. இதன் தலைநகரம் பாடலிபுத்திரம் (இன்றைய பிஹாரின் தலைநகராகவுள்ள பாட்னா)

மகத ராஜ்ஜியத்தை, பிம்பிசாரரும், அஜாதசத்ருவும் ஆண்டனர். அஜாத சத்ரு ஆட்சிக்குப் பிறகு சிசுநாக வம்சம் வட இந்தியாவை ஆண்டது. தொடர்ந்து நந்தவம்சம் ஆட்சி பீடத்தைப் பிடித்தது.

வட இந்தியா முழுவதையும் உள்ளடக்கிய ஒரு பெரும் பேரரசை நந்தர்கள் உருவாக்கினார்கள். இதன் கடைசி மன்னன்தான் தனநந்தர். அவர்தான் மக்களைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தார்.

தலை சுற்றியது சாணக்கியருக்கு அறிவு ஜீவிகள் மிகுந்த பாரதநாடு ஏன் இப்படி யார்யாரோ கைகளிற் சிக்கித் திண்டாட வேண்டும்?

பயணம் தொடரும்.....

### "பரிபூரண சரணாகதி"


| | |
|---|---|
| குடும்பஸ்தர் ஒருவர் :- | இறைவன் பேரால் அற்புதம் செய்யிறாங்களே அதெப்படி |
| மற்றவர் :- | தீவிரமான நம்பிக்கையும் பரிபூரண சரணாகதியுந்தான். |
| குடும்பஸ்தர் :- | இதே தத்துவத்தாற்தான் எங்கட குடும்பத்தில சண்டை சச்சரவே கிடையாது சார். |
| மற்றவர் :- | அது என்ன தத்துவம்? |
| குடும்பஸ்தர் :- | ''பரிபூரண சரணாகதி''.............. மனைவியிடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை

# யார் பெரியவன்?



கரங்களிலுள்ள "ஐந்து" விரல்களுக்கும், இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது, எம்மில் யார் பெரியவன்?

உடனே நடுவிலுள்ள நீண்ட விரல் கூறிற்று, இதில் என்ன சந்தேகம் நானே பெரியவன் இதை யார் பார்த்தாலும் உடனே கூறிவிடுவார்கள். என்னை விட உங்களால் வளரத்தான் முடியுமா? என்று பெருமையாகப் பேசீற்று. உடனே மோதிர விரல் ஏளனமாகச் சிரித்தது, நீா் ஒரு வெறும் ஆள் எப்படிப் பெரியவனாக முடியும்? உயரமாக இருந்தால் மட்டும் போதுமா?

எனக்குத்தான் கௌரவமாகத் தங்க மோதிரம், வைரமோதிரம், எத்தனையோ டிசைன்களிற் போடுகிறார்கள். திருமணத்தின்போது உலகமே எனக்குத்தானே மோதிரம் போடுகிறது. நான்தான் பணக்காரன் எனவே நானே பெரியவன், கௌரவமானவன் என்றது.

ஆள்காட்டி விரல் ஆவேசமாகச் சிரித்து. பணமிருந்தும் என்ன பயன்? ஆளுமை இல்லையே. ஆணைகளை இடுவது நான்தான். ஏதும் பிரச்சினை என்றால் முன் நிற்பவன் நான் மட்டுமே. நீங்கள் அனைவரும் குப்புறப்படுத்துவிடுவீர்கள் "வீரனே" உலகிற் பெரியவன். இப்போதெல்லாம் எனக்குத்தான் மோதிரம் போடுகிறார்கள். சந்தேகம் இல்லை நான்தான் பெரியவன் என்றது.

இதைக் கேட்ட பெருவிரல் சாந்தமாகவே பதில் உரைத்தது. நானின்றித் தனித்து உங்களால் என்னதான் செய்ய முடியும்? எழுத உறுதுணையாக நானே வேண்டும். உணவுண்ண நானே வேண்டும். பாரந்தூக்க நானே வேண்டும். உதவி செய்பவனே உலகிற் பெரியவன் என்று கூறிற்று.

சின்ன விரல் கேட்டார் "உலகில் யார் பெரியவன்?" இதில்



என்ன சந்தேகம்? இறைவன் தான் என்றார்கள் ஏனையோர்கள். சரி இறைவனிடம் வாருங்கள் எனக் கூறி கோவிலுக்கு அழைத்துச் சென்றது....... இறைவன் முன்வந்ததும் கும்பிடச் சொல்லிற்று.

அனைவரும் இருகரங்களையும் கூப்பிக் கும்பிட்டனா். இப்போது சிறியவிரல் அமைதியாகக் கூறிற்று. "உலகிலேயே பெரியவா் இறைவன், அடுத்தபடி பெரியவா் அவருக்கருகில் இருப்பவரே இப்போது தெரிகிறதா? இறைவனுக்கருகில் நிற்பவன் நானே. முடிந்தால் எனக்கு முன்னால் வந்து நின்று நீங்களும் பெரியோர் ஆகலாம்" என்றது.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சிறப்புத் தன்மைகள் காணப் படும். சிறியார் என்று ஒதுக்கி விடக்கூடாது. உன்னிலுள்ள சிறப்புத் தன்மையை இன்றே இனங்கண்டுவிடு.

### சிந்தனைக்கு

கணித மேதை ஐஸ்டைனிடம் ஒருவர் வந்து,
வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி? என்று கேட்டாராம்.
அதற்கு ஐஸ்டைன் கூறினார்
"A = x + y + z " என்று, கேட்டவருக்கோ ஒன்றுமே புரியவில்லை.
"இதன் பொருள் என்ன?" என்றாராம்
"A என்பது வாழ்வின் வெற்றி
x என்பது கடின உழைப்பு
y என்பது ஆரோக்கியமான விளையாட்டு" என்றாராம்.
"அப்படியானால் z என்பது?...."
"அதிகம் பேசாது வாயை முடிக்கொண்டிருப்பது" என்று பதில் வந்தது.

ஒரு குருஜீயிடம்
ஒருவர்:- எனக்கு நீண்ட நாளாகக் குழந்தைப் பாக்கியமில்லை நான் குழந்தை பெறவேண்டும் என்றான்.

குருஜீ:- பேசாமல் கதிர்காமம் போய் வா என்றார்


அவர்:- நான் கதிர்காமக் கோவிலிற்தான் வேலை செய்து கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபாரதத்தில் கிருஷ்ணரின் வகிபாகம்

**கீதை பிறந்தது....**



அக்னி, பிரம்மா, இந்திரன் முதலிய தேவர்கள் தவம் செய்த புண்ணிய பூமி குருசேஸ்திரமாகும். அந்தப் புண்ணிய பூமியிற்தான், கௌரவர்களும், பாண்டவர்களும் தத்தமது படைகளுடன் எதிரெதிராக அணிவகுத்து நின்றார்கள்.

கௌரவப் படைக்கு பீஷ்மரும், பாண்டவர் படைக்கு திருஷ்டத்யு மன்னனும் தலைவர்களாக படைகளின் முன்பு காணப் பட்டார்கள்.

அர்ச்சுனனின் தேரை ஓட்டி வந்தவர் கிருஷ்ணர். இரு தரப்பிலும் வாத்தியங்களின் முழக்கம் பேரொலியாக எழுந்தது. அர்ச்சுனன் இருதரப்புப் படைகளுக்கும் நடுவில் தேரை நிறுத்துமாறு கிருஷ்ணரைக் கேட்டுக் கொண்டான். கிருஷ்ணரும் அவ்வாறே செய்தார்.

தேரில் இருந்த வண்ணம் அர்ச்சுனன் எதிரில் இருந்த படையை ஒருமுறை நோக்கினான், பீஷ்மர், துரோணர், கிருபர், துரியோதனன், கர்ணன், சல்லியன் போன்றோர் எதிரிகளாக நிற்பதைக் கண்டதும் அவனுடைய தலை சுழன்றது. காண்டீபம் நழுவி தேரில் சரிந்தது. அவனுடைய உடலில் நடுக்கமும் பதற்றமும் தோன்றியது.

**"வணங்கத் தகுந்த ஆசார்யர்களையும், உறவினர்களையும் போரிற் கொல்வதா?, மூவுலகும் கிடைப்பதாக இருந்தாலும் இந்தத் தகாத செயலைச் செய்ய மாட்டேன்" என்று கூறிய அர்ச்சுனன் சோர்வுடன் தேர்த்தட்டில் அமர்ந்தான்.**

அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட சோர்வையும், தளர்ச்சியையும் துயரத்தையும் போக்க கிருஷ்ணர் திருவுளங்கொண்டார்.

போரிடுவது மட்டுமே அர்ச்சுனனின் தர்மம் என்றும் அச்செயலின் பலன்கள் யாவும் தன்னுடையது என்றும் கிருஷ்ணர் விளக்கினார். **எச்செயலைச் செய்தாலும் அதில் பற்று வைக்காமல் இருக்க வேண்டும்.**



"செய்வதற்கு மட்டுமே உரிமைபெற்ற அர்ச்சுனா, இப்போது உன் செயல் போர் புரிவது மட்டுமே..... கிருஷ்ணர் இவ்வாறு கூறியதும் அர்ச்சுனன் தெளிவு பெற்றான்.

அர்ச்சுனனுக்கு தெளிவுபிறக்க கிருஷ்ணர் வாய்மொழியாக செய்த, உபதேசமே "பகவத்கீதை" என்று புகழப்படுகின்றது. மகாபாரதத்தில் பகவத்கீதை பீஷ்மபர்வத்தில் 25ஆம் அத்தியாயம் முதல் 42 ஆவது அத்தியாயம் வரை உபதேசிக்கப்படுகிறது.

**குழப்பம், தயக்கம், தெளிவற்றநிலை, சோர்வு, மயக்கம் இவற்றிலிருந்து அர்ச்சுனனை விடுபடச்செய்து செயல்படவைத்ததே கிருஷ்ணரின் கீதோபதேசம், கர்மம், பக்தி, ஞானம் என 18 அத்தியாயங்களில் சொல்லுகிறார். போர்க்களத்தில் பிரசவமான கீதை மனித மனப் போராட்டங்களை சீர்செய்கிறது.**

மகாபாரத யுத்தத்திலே மூன்றாம் நாள் பீஷ்மரின் தலைமையில் கௌரவர்களின் படை, பாண்டவர்களை கதிகலங்க வைத்தது, பீஷ்மர் மின்னல் வேகத்தில் தாக்குதல் செய்தார்.

எந்த திசையை நோக்கினாலும் அங்கே பீஷ்மர் தோன்றி, போர் புரிந்து கொண்டிருந்தார். பாண்டவர்களின் படை சிதறியது.

தருமரும் அர்ச்சுனனும் கலக்கமடைந்தனர். கிருஷ்ணர் தேரோட்டிய வண்ணம், அர்ச்சுனனின் கலக்கத்தைப் போக்கினார். "பீஷ்மர், துரோணர் முதலான வீரர்கள் அனைவரையும் வெல்வேன்" என்று அர்ச்சுனன் செய்த சபதத்தை கிருஷ்ணர் நினைவூட்டி அவனுக்கு உற்சாகமளித்தார்.

அர்ச்சுனனும் பீஷ்மருடன் நேருக்குநேர் யுத்தம் செய்யலானான். ஆனால் பீஷ்மரின் வீரத்திற்கு முன்பு எதிர்நிற்க முடியாமல் அர்ச்சுனன் தடுமாறினான். பீஷ்மரின் வீரத்தையும் கோபத்தையும் கண்டு கிருஷ்ணரே ஒரு கணம் நடுங்கிப்போனார். இவ்வாறு அவர் தொடர்ந்து போரிட்டால், பாண்டவர்களின் அழிவு நிச்சயம்! தோல்வியே மிஞ்சும் என்ற எண்ணம் உதித்தது.

மறுகணமே கிருஷ்ணர் மனதால் சக்கராயுதத்தை எண்ணினார். அக்கணமே சக்கராயுதம் அவருடைய கையிற் சுழன்றது. பீஷ்மரை நோக்கிச் சென்ற கிருஷ்ணரைப் பின்தொடர்ந்து அர்ச்சுனன் ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீஷ்மரோ, "கிருஷ்ணரின் திருக்கரங்களால் இறப்பதைவிடவும் மேலான பதவி உளதோ" என்று பூரித்தபடி, கிருஷ்ணரை வரவேற்றார். பின்தொடர்ந்து வந்த அர்ச்சுனன் கிருஷ்ணரின் காலடியில் அமர்ந்து போரில் தாங்கள் "ஆயுதம் ஏந்தமாட்டேன்" என்ற வார்த்தையை மீற வேண்டாம் என்றும், துரியோதனனின் படையை நான் அழிப்பேன்; என்று கூறி கிருஷ்ணரை மீண்டும் தேரோட்டியாக இருக்கும்படி வேண்டினான். அவ்விதமே அவர் செயற்பட்டார்.

அடுத்து... பகதத்தன் நரகாசுரனின் வழித்தோன்றலாவான். இவன் பருத்த தேகமுடையவன். வயது முதிர்ந்தவனாக இருந்தபோதும், போர் புரியும் போது இளைஞர்களுக்குரிய வீராவேசத்துடனும், வலிமையுடனும், ஊக்கத்துடன் வீரப்போர் புரிவான். பகதத்தன் வைஷ்ணவாஸ்திரத்தை எய்து அர்ச்சுனனை வீழ்த்த எண்ணியது பலனற்றதாகிற்று. மீண்டும் ஆவேசமாக அம்புமழை பொழிந்தான். அவனது வீர ஆவேசத்தைக் கண்ணுற்ற கிருஷ்ணர் மலைத்து நின்றார். அர்ச்சுனனுக்கும் அவனுக்குமிடையிலான போர் நீண்ட நேரம் நடந்தது.

அப்போது கிருஷ்ணருக்கு பகதத்தன் பற்றிய விடயமொன்று நினைவிற்கு வந்தது. பகதத்தனின் இமைகளின்மீது சதை வளர்ந்து தொங்குவதால் அவன் அச்சதையை நெற்றியிற் தூக்கி வைத்து ஒரு துணியால் கட்டியிருந்தான். அத்துணி இல்லாவிடில் சதை தொங்கி கண்ணை மறைத்து விடும்.

இந்த விடயத்தைக் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறி "அர்ச்சுனா! ஓர் அம்பைவிட்டு அவனுடைய தலையில் கட்டியிருக்கும் துணியை அறுத்துவிடு. பிறகு அவன் பார்க்க இயலாதவனாகி விடுவான் என்றார்.

கிருஷ்ணர் கூறியதை அர்ச்சுனன் நடத்திக் காட்டினான். குறிதவறாத அர்ச்சுனனின் அம்பு பகதத்தனின் தலையிற் கட்டியிருந்த துணியை அகற்றியதும் சதை தொங்கத் தொடங்கியது பகதத்தன் எதையும் பார்க்க முடியாதவனாகத் தடுமாறினான். அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண்ட அர்ச்சுனன், அம்புமாரி பொழிந்தான். அவனது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத பகதத்தன் போரில் அடிபட்டு மாண்டான்.

**"வீரத்தை விட விவேகம் பெரியது"**



# சாதனைப் பெண்கள் வரிசையில்

# கவிக்குயில் சரோஜினிதேவி



சிறந்த அறிவும், ஆற்றலும், சீரிய பண்புகளும் கொண்ட அகோரநாத் சட்டோ பாத்தியாயாவுக்கும், வரதசுந்தரி தம்பதியினருக்கும், 1879பது, பெப்ரவரி 13ந் திகதி மூத்த மகவாக சரோஜினிதேவி பிறந்தார்.

தந்தையார், பல்கலைக்கழக மாணவ னாக இருந்தபோது, கிரேக்கம், ஈப்ரு, பிரெஞ்சு, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய மொழிகளைக் கற்றிருந்தார்.

இங்கிலாந்து சென்று எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று, இயற்பியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றிருந்தார். இவர்தான் இவ்வாறான பட்டம் பெற்ற முதல் இந்தியருமாவார். இவ்வளவு சிறப்புள்ள வரே சரோஜினியின் தந்தையார். இவர்கள் பிராமணக் குடும்பத்தினரா வார்கள்.

அப்போது, "பெண்கல்வி" ஒடுக்கப்பட்டுத் தடுக்கப்பட்ட காலம், அக்கால கட்டத்தில் பெற்றோர் மகளை சென்னைக்கனுப்பிக் கல்வி புகட்டினார்கள். சரோஜினிக்குப் பின்பு நான்கு ஆண்களும் மூன்று பெண்களும் சகோதரர்களாகப் பிறந்தார்கள்.

மெட்ரிகுலேசன் தேர்வில் சரோஜினி சித்தியடைந்த பின்பு **ஹைதராபாத்** வந்து பெற்றோருடன் தங்கினார். வீட்டில் இருந்துகொண்டே ஏராளமான புத்தகங்களைப் படித்தார். பலகட்டுரைகளைக் காத்திரமாக எழுதினார். ஒரு நாவலையும் எழுதினார்.

அந்தக்காலப் பகுதியில் வீட்டில் இருந்து கொண்டே, பிரௌனிங், ஷெல்லி, தென்னிசன் போன்ற பிரபல்ய ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளை வாசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்க்கு வரும் பெரியோர்களின் விவாதங்களிலும், பேச்சுக் களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இதனால் அவரது அறிவு மென்மேலும் விருத்தியடைந்தது.

சரோஜினிதேவி மெட்ரிகுலேசன் தேர்வில் மாபெரும் சாதனை படைத்துவிட்டது மட்டுமல்ல, பாரசீக மொழியில் நாடகமொன்றை எழுதி! உள்ளூர் இதழுக்கு அனுப்பவே அது வெளியானது.

அதன் பிரதி ஒன்று மன்னர் ஹைதராபாத் நிஜாமுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இதன் விளைவு சரோஜினி இங்கிலாந்து சென்று படிப்பதற்கு மன்னர் ஆண்டுதோறும் 300 பவுண்களை அளிப்பதற்கு முடிவு செய்தார்.

1895இல் சரோஜினி 16வது வய்தில் இங்கிலாந்து சென்று லண்டனிலுள்ள "கிங்ஸ்" கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு படித்து விட்டு "கேம்பிரிஜ்" சர்வகலாசாலையிற் சேர்ந்தார்.

படிப்பிற் கரிசனை செல்லாவிட்டாலும், கவிதையில் நாட்டங்காணப்பட்டது. இங்கிலாந்தில் இலக்கியத் துறையில் புகழ்பெற்ற ஆங்கில அறிஞர்களின் நட்பு சரோஜினிக்குக் கிடைத்தது.

அவர் 19வது வயதில் 1898ல் இந்தியாவிற்குத் திரும்பினார். டாக்டர் கோவிந்தராஜுலு நாயுடுவைத் திருமணம் செய்து கொண்டார். பிராமணகுலப் பெண்ணான சரோஜினி, நாயுடு வம்சத்தவரை குலபேதமின்றி மணந்தார்.

1903ஆம் ஆண்டு முடிவதற்குள் நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இவர் சிறுமியாக இருக்கும்போதே சிறந்த மேடைப்பேச்சாளர். இவரது ஆசானாகக் கோபால கிருஷ்ணர் காணப்பட்டார். இவரே சரோஜினிக்கு மகாத்மா காந்தியை அறிமுகம் செய்து வைத்தவர்.

சமூகத் தொண்டிலும், அரசியலிலும் அவரது ஆர்வம் திரும்பியது. **இவரது இலட்சியங்களாக பெண்கள் விடுதலை, அடிமைப்பட்டுக்கிடக்கும் இந்திய விடுதலை, இந்து - முஸ்லிம் ஒன்றுமை.**

இந்த மூன்று இலட்சியங்களையும் அடைவதற்காக தனது ஆற்றல் முழுவதையுமே செலவிட்டார். பல பொதுக் கூட்டங்களிலும், கல்லூரிகளி



லும் இவற்றிற்காகப் பேசி தனது நாவன்மையால், சமூகத்திலே பெரியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அவரது பணியை இந்தியரும், ஆங்கிலேயரும் பாராட்டத் தவறவில்லை.

இந்தியாவெங்கும் பொதுக்கூட்டங்களிற் பேச அவருக்கு அழைப்புகள் வந்து குவிந்தன.

கவிதை புனைவதிலும் சமத்தராகவே துலங்கினார். 13 வயதிலேயே 1300 வரிகொண்ட செய்யுள் ஒன்றை எழுதினார். 2000 வரிகள் கொண்ட நாடகத்தையும் எழுதினார்.

சரோஜினி எழுதிய கவிதைகளை தாமே, மேடைகளிலும் பாடிக்காட்டினார். இவரது கவிதைகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பல ஏடுகளில் வெளிவந்தது. தனது கவிதைகளை ஒன்று திரட்டி நூலாக வெளியிட்டார் சரோஜினிதேவி.

நூல்கள் மிக வேகமாக விற்றுத் தீர்ந்தது. பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிந்தன. 1912ல் சரோஜினியின் இரண்டாவது கவிதை நூலையும் வெளியிட்டார். இந்நூலைத் தொடர்ந்து பல நூல்களையும் வெளியிட்டார்.

இந்த நூல்கள் மூலம் உலகப் பிரசித்தி அடைந்து "கவிக்குயில் சரோஜினிதேவி" என்ற புகழ்மாலையைப் பெற்றார். ஆங்கில அறிவு அவருக்கு ஆறாகவே ஓடியது. இவ்வளவு பேரும் புகழும் கிடைத்தபோதும், தற்பெருமையோ, தலைக்கனமோ அவரிடம் காணப்படவில்லை.

இவரது கவிதைகளைப் படித்தும் கேட்டும் அகமகிழ்ந்த காந்தியடிகள் அவருக்கு "**பாரத் கோகிலா**" என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினார்.

சரோஜினி அமெரிக்காவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டபோது, பல பத்திரிகைகள் அமெரிக்காவில் அவர்பற்றி பல கட்டுரைகளை வெளியிட்டிருந்ததாம்.

"**இந்தியக் கவியரசி அமெரிக்க வருகை**" இவ்வாறு பல செய்திகள் வெளியாயிற்று.

பெண்ணுரிமைப் போராட்டத்தில் துணிச்சலுடன், நீச்சற்போட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோஜினி நாயுடு. இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாட்டுப் பெண்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது.

அன்று பெண்களுக்கு சமுதாயத்தில் எவ்வித உரிமைகளோ, மரியாதையோ இருக்கவில்லை. வீட்டிற்குள் அடைந்து கிடக்கும் அவல நிலை. ஆண் வர்க்கத்தின் அராஜகத்திற்கும், அடக்குமுறைக்கும் அளவே யில்லை. தட்டிக்கேட்க நாதியுமில்லை. இவ்வாறானது பெண்களின் நிலை.

ஆண்கள் பலதார மணம் செய்து சுகபோகம் அனுபவித்தகாலமது. கணவன் இறந்தால் அவளையும் எரியூட்டும் தீயில் உயிரோடு போட்டெரிக்கும் அகோரச்சதி. உடன்கட்டை ஏறுதல் என்ற பெயரில் இடம்பெற்றது.

பால்ய விவாகம்! இளஞ்சிறுமிகளின் எதிர்காலக் கனவுகளைச் சீரழித்து சின்னாபின்னமாக்கியது. இவ்வாறான காலகட்டத்திற்தான் சரோஜினி, துணிச்சலுடன் வீராவேசங்கொண்டு கண்மூடிக் கொடுமைகளுக் கெதிராக சாடிச்சங்கூதி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 1906ல் கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் **"இந்திய மகளிர் கல்வி"** பற்றி சொற் பொழிவாற்றினார் சரோஜினி.

இவ்வாறான பேச்சுக்களால் அனைவரையும் காந்தமாகக் கவர்ந்து, கண்களைத் திறந்து விட்டார். இவரது தீவிரப் பேச்சாற்றலால், அனேக பெண்கள் புத்துணர்வு பெற்று வெகுண்டெழுந்து, மேடையேறி முழங்கினர். 1908ல் பம்பாயிலும், சென்னையிலும் பொதுக்கூட்டங்களிலும் **சரோஜினி நாயுடு மேடையில் முழங்கியதால் "விதவைகள் இல்லங்கள்" உருவாகின.**

**சரோஜினிதேவி தொடக்கி வைத்த பெண்கள் இயக்கங்கள் வளர்ந்து, அகில இந்தியாவிற்கு தலைமை அமைப்பாக "இந்திய மாதர் சங்கம்" தோற்றுவிக்கப்பட்டது.** 1917ல் சரோஜினி இந்தியா பூராகவும் சுற்றுலா சென்று பிரச்சாரம் செய்தார்.

1917ல் டிசம்பர் 17ல் சரோஜினி தலைமையில் பெண்கள் அமைப் பொன்று, மாண்டேகுவைச் சந்தித்து மனு ஒன்றை முன்வைத்தது. மகாத்மாகாந்தியுடன் இணைந்து நாட்டின் சுதந்திரத்திற்காக வீரத்துடன் மனந்தளராது போராடினார் சரோஜினி.

1919ல் ஏப்ரல் 6ல் பம்பாயில் கிளர்ச்சி நடைபெற்றது. காந்தியும்,



சரோஜினியும் உணர்ச்சிமேலிட உரையாற்றினர். காந்தி கைது செய்யப் பட்டார். மக்கள் வீராவேசங்கொண்டு வெள்ளையர் ஏகாதிபத்தி யத்தை எதிர்த்தனர். விண்ணதிர வீர முழக்கமிட்டனர். இதற்கிடையில் சரோஜினிக்கு சொற்பொழிவிற்கும், சமூகசேவைக்குமாக ஆங்கிலேயர் அளித்த தங்கப்பதக்கத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார். ஏனைய தலைவர்களும் தமது பட்டங்களைத் துறந்தனர்.

**பல்வேறு கண்டனங்கள் அம்மையாரை அடக்க முற்பட்டபோதும், அம்மையார் அசையவில்லை. வீரமுழக்கமும் குறையவில்லை. திக்கெட்டும் தீவிரமாய் முழங்கியது.** 1916ல் லக்னோவில் சரோஜினியின் முழக்கங் கேட்டு காந்தியடிகள்கூட வியந்து போனார். சரோஜினியின் வீரதீரங்களை அவதானித்த ஆங்கிலேயப் பெரியார்கள் கூட அதிரடியாக அதிர்ச்சி அடைந்தனர். வியந்தனர்.

வீரத்தின் ஜீவநதியாகப் பிரவாகித்து பூரிப்பான ஜீவசக்திகளை ஆயிரக்கணக்கான மேடைகளில் முழக்கி மக்கள் மனங்களில் உறையவைத்தார். அதிகார வர்க்கத்தின் அதிரடிகளுக்கு அவர் அஞ்சவில்லை. வீறுநடைபோட்டு முன்னேறினார். பேச்சாற்றலாலும், எழுத்தாற்றலாலும் ஆங்கிலேய அதிகார வெறிக்குச் சாட்டைஅடி கொடுத்தார். அச்சமில்லா அதிரடி வீராங்கனையாக முனைந்து முன்னேறிச் சாதனைகள் படைத்தார்.

விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் சரோஜினி தேவிதான். ஆளுநர் மாளிகை அனைவருக்கும் எப்போதும் திறந்தே இருந்தது.

1948 ஜனவரி 30இல் காந்தியடிகளின் மரணத்தின் பின்பு, சரோஜினியின் உடலும், உள்ளமும் மிகச்சோர்வுற்றது.

1949 மார்ச் 2ம் திகதி தனது எழுபதாவது வயதில் அதிகாலை 3 மணியளவில் உலகக் கூண்டைவிட்டுப் பறந்தது. புரட்சிப் பூங்காவான கவிக் கோகிலம். மக்கள் புலம்பினர். ஆறாத் துயரில் ஆழ்ந்தனர்.

இந்திய விடுதலைப் போரில் மகாத்மாவின் வலதுகரமாக வலம்வந்த கவிக்குயில் சரோஜினிதேவியின் புகழ்மாலை சரித்திர ஏடுகளில் சங்கமித்தது.

**ரா. சௌந்தர்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் ஊற்றுவோம்

ஔவை சரோஜா



அமைதித் தேசத்தை
ஆட்சி செய்யப்
புறப்பட்ட எனக்கு
புறக்கணிப்பா?......
புரட்சிப் புதிர்களையா?
விதைக்கிறீர்கள்?....
விதையுங்கள்....
விறைத்து விடமாட்டேன்.
வியக்கும்படி
வீறுநடை போட்டு,
விந்தை படைக்கிறேன்.
**புதுப் புது புயல்கள்**
**புறப்பட்டு வரும்.**
**புரட்டிப் பார்த்து விட்டு**
**புலம்பாதீர்கள்.**
**புரிந்துகொள்ளுங்கள்**
**புறங்கூறுவதை விடுத்து,**
**உங்களை நீங்களே**
**புடமிடுங்கள்.**
வெறும் புராணம் வாசிக்காது
புரிந்து கொள்ளுங்கள்.
வெறும் குடம் - நான்
என்று,
கரம் தொடுக்காதீர்கள்
**வரம் கேட்க**
**வரவில்லை நான்**
**பெற்ற வரத்தை**
**தரங்குறையாது**
**தரவே**
**தர்மயுத்தம் புரிகிறேன்.**

உங்களுடைய
பேச்சு மழை எதற்கு?
மூச்சுப் போகுமுன்
முரண்பாடுகளை
மூட்டை கட்டிவிட்டு;
**முந்துங்கள்... முந்துங்கள்**
**முளைத்திருக்கும்**
**தத்துவ முத்துக்களை**
**சொத்தாக்குவதற்கு**
புழுவொன்று
புலம்புகிறது என்று
புரியாது புறம் தள்ளாதீர்கள்,
**புற்று நாகங்களையே**
**புடமிட்ட**
**புது நெருப்பிது...**
**புறப்பட்டு விட்டது.**
**புரையோடிக் கிடக்கும்**



**புழுதிகளை**
**புறந்தள்ளுவதற்காக.**
நீங்களும்
புறப்பட்டு விட்டீர்களா?
புறப்படுங்கள்
புதிய சிந்தைகளை
புரிந்துணர்வுடன்
நிரப்புங்கள்
புத்திஜீவிகள்
புனித நீராடட்டும்.
புலம்பெயர்ந்தோரும்
புசிக்கட்டும்.
புரட்சி மழை
கிளம்பட்டும்,
தூசுகளையெல்லாம்
துன்பமென்று
துலங்கித்
துவளாது,
துடைத்து விட்டுத்
துள்ளி எழுங்கள்.
துட்டர்களுக்கு
இடையிற்
துணை போகாதீர்கள்
பொய் முகங்களைப்
புறம் தள்ளி விட்டு,
புதிய பாதையை
புனைந்து விட்டு
புறப்படுங்கள்
**பொறாமைகளைப்**
**பொசுக்கிவிட்டு**
**பொறுமைக்கு**
**தூபமிடுங்கள்.**

வெறுமைகளை
விலக்கி விட்டு
முதுமைக்குள்
முடங்கும் முன்பு,
முடிந்தவரை
முயற்சிக் கடலில்
முத்துக் குளியுங்கள்.
நத்தை வயிற்றிற்குள்ளும்
நந்த வனம்
பூப் பூக்கும்.
புறப்படுங்கள்......
புறப்படுங்கள்.
வேர்கள்
வெந்துபோக முன்பே
நீரூற்றுவோம்.



எதைச் செய்யப் போனாலும்! ஏன்? எதற்கு? எப்படி? எங்கே? எவ்வாறு? எந்தளவு? என்ற கேள்விகளைக் கேட்ட பின்பே திட்டமிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதிகாரச் சாரல்கள்

இரா. மதியழகன்



"ஹிட்லர்'' என்ற சர்வதிகாரியைத் தெரியாதோர் கிடையாது. அவரிடம் வேலை செய்பவர்கள் அவர் போட்ட கோட்டைத் தாண்ட மாட்டார்கள். ஹிட்லர் என்ன சொன்னாலும் ஏன்? எதற்கு? என்ற கேள்விகளைக் கேட்காமலே நிறைவேற்றிவிடுவார்களாம்.

ஒரு ஆங்கில அரசியல்வாதி ஹிட்லரைக் காணச்சென்றாராம். அப்போது ஹிட்லர் கப்பலின் மேல் தளத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தாராம். அரசியல்வாதியைக் கண்டதும் நல்லவேளை நீங்கள் பின் வாங்கியது இல்லாவிட்டால் ஒரு சைகை மூலமே உங்களை அழித்திருப்பேன் என்று பெருமையாகக் கூறியவர் இதோ பாருங்கள்... என்றார்

கையைத் தட்டி சைகையில் வா என அழைக்க ஒருவன் ஓடிவந்தான். கம்பீரமாகச் சலூட் அடித்தான் "கடலிலே குதி" என்று சைகையிற் காட்டியது தான் அடுத்த வினாடி அவன் லபக்கெனக் குதித்து இறந்தான். ஆ! அது என்ன நிர்வாகம்? அரசியல்வாதி வாயைப் பிளந்தார். ஹிட்லர் மறுபடியும் இன்னொருவனுக்கு சைகை மூலம் ஆணையிட்டார் அவனும் அதற்காகவே காத்திருந்தவன் போல் பாய்ந்து இறந்தான்.

அரசியல்வாதி ஆச்சர்யத்தின் உச்சியில் நின்று வியந்தார். அவருக்கு தலைமட்டுமல்ல, உடலே சுற்றியது. அரசியல்வாதியின் வியப்பை விறைக்க வைக்க எண்ணிய ஹிட்லர் அடுத்த சைகை மூலம் மூன்றாவது நபரை அழைக்க அவனும் கம்பீரமாக வந்தான் குதிக்கும்படி சைகை செய்தார் ஹிட்லர். அவனும் குதிக்கப் போனான். அரசியல்வாதி லபக்கென எட்டிப் பிடித்தார். "உனக்கென்ன பைத்தியமா?" அவர் ஆணையிட்டதும் குதித்து உயிரைவிடுவதா?

உடனே அந்த ஆள் கூறினான். "ஐயா! இந்தாளுக்கிட்ட வேலை செய்யிறதைவிட கடல்லே விழுந்து சாகிறது மேல்" என்றவன் கையை இழுத்துக்கொண்டு கடலிற் பாய்ந்து மரணித்தான்.


**சர்வதிகாரத்திற்கு என்றோ ஒரு நாள் சாவுமணி அடிக்கப்படும், சரித்திரங்கள் சான்று பகர்கின்றது.**



சிறுகதை

# மறு பக்கங்கள்

ச. லக்சுமிகாந்தன்



சிவகாமி...... சிவகாமி... உன்ர சீத்துவமான வளர்ப்பப்பார்..... ஊரே சிரிக்கிது..... உன்னைச் சொல்லிக் குற்றமில்லா எல்லாம் என்ர தலவிதி..... தலவிதி.... ஆத்திரமாகவும், ஆதங்கமாகவும் தனது கௌரவக் கீறல்களைப் புடம் போட்டுக் காட்டினார் மூர்த்தி.

சிவகாமியோ அடியும், நுனியும் புரியாது தடுமாறினாள்..... என்ன நடந்திட்டுது எண்டு இப்படிக் கத்திறீங்க?........ கொஞ்சம் விளக்கமாத்தான் சொல்லுங்களன்..... என்றாள். ஓம்! உன்ர உத்தமபுத்திரியிட கெட்டித்தனத்த விளக்கமாத்தான் சொல்லோனும்.... சொல்லுறன் கேள். உன்ரமகள் உமா அந்த நாடார் நடேசன்ர மகன் ரவியோட ஒரே கூத்தாம்..... டியூட்டறி நாறுதாம். ஒப்பிஸில விமலதாஸ் சொல்லித்தான் எனக்கு இந்தக் கூத்து தெரியும். கண்டறியாத டியூட்டறி பெரிய படிப்பு..... நாங்க என்ன டியூட்டறிக்கா போய்ப்படிச்சநாங்க? இப்ப இதெல்லாம் ஒரு பசன். காசையும் கரியாக்கி பேரையும் நாசமாக்குதுகள்.

இஞ்ச! அப்படிச் சொல்லாதேங்க போட்டியா டியூட்டறிகள் இயங்கேக்க கல்விச் ஸ்ரான்டட்டும் உயரும். யூனிவசிற்றி என்ரன்சும் கூடும். புள்ளைகளும் பிறீடமாப் படிக்குங்கள்.

ஓ! பெரிய பிறீடம்.... பிறீடந்தான் இப்ப பீத்தலாப்போச்சு ஆத்திரம் அலைமோத, நீயாச்சு உன்ர மகளாச்சு..... என்று ஆத்திரத்தைக் கொட்டித்தீர்த்தவர் தனது அறையை நோக்கி நடந்தார்.....

சிவகாமிக்கோ! இதை நம்புவதா? இல்லை நம்பாமல் விடுவதா? உமாவா இப்படி? சீ இருக்காது அவள் சின்னப்புள்ள... ஆனாலும், மரியாதையானவள்..... ஆம்பிளைகளோட வழியப்போகமாட்டாள்..... புத்திசாலி.... கடைசிவரைக்கும் சோரம் போகமாட்டாள். இது யாராவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிவிட்ட கதையாகவும் இருக்கும். ம்........ம் ஆனா இதைக்கேட்ட பிறகும் சும்மா இருக்கிறதும் பிழை..... அவள் குழந்தப்புள்ள எண்டு நான் நினைக்கிறன். ஆனா அவளுக்கு பத்தொன்பது வயசாச்சு மூக்கும் முளியுமா மும்பாய் அழகிமாதிரிவேற இருக்கிறாள். அவளது ஓரங்கநாடகத்தை கலைத்தாள் உமா,

அம்மா!.................அம்மா!..... உங்கட கறி ரோட்டில வரேக்கையே மணக்கிறது.... மணத்தில பசிவேறு வயித்தக்குடையிது......

உமா! இப்ப என்ன பாடம் நடந்தது.....?

பொட்னி! ஏனம்மா இண்டைக்கி புதினமாக் கேக்கிறீங்க? ஆவலாகக் கேட்டாள் உமா.

அந்த நாடார் நடேசபிள்ளையின்ர மகன் ரவிக்கும் உனக்கும் என்ன கொண்டாட்டம்?

ஓ! அந்த லூஸ் ரவியையா கேக்கிறீங்க?.... அவன் ஒரு அலட்டல்கேஸ் சும்மா அலட்டிக்கொண்டே திரிவான்.....நான் எண்டால் அவனைக் கணக்கெடுக்கிறதே கிடையாது.... இந்த பிறன்ஸ்மார் சும்மா ஜோக்குக்கு என்னையும் அவனையும் வச்சுப் பேசுவாங்க. "தற்ஸ்சோல்" என்று நெளிவுசுளிவாகப் பேசிமுடித்தாள் உமா.

**"அம்மா! நான் உங்கட மகள்"**

**அப்போ உன்னப் பூரணமாக நம்பலாம் என்றியா?.....**

**"இயேஸ் ஒப்கோஸ்"**

**அப்பா, அம்மாட கௌரவத்த மட்டும் கப்பலேத்திப் போடாத, போய் முகங்கைகால் கழுவிற்றுவா சாப்பிட......** * * * * * *

அன்று சிவகாமி சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு உடுதுணிகள் வாங்கிக் கொண்டிருந்தாள்.....

ஏய்!..... சிவா.......



ஓ..... அபியா?.... அபி எப்படி சுகமா இருக்கிறியா?.... உங்களுக்கென்ன இரண்டுமணியோட பள்ளிவிட்டிடும், ஜொலியா சொப்பிங் செய்வீங்க..... நான் அரநாள் லீவுபோட்டுத்தான் வந்தநான்....

சிவா!.... சொன்னாப்போல இப்பதான் ஞாபகம் வருகிது. உன்ர மகள் உமா...... இப்ப நல்லவடிவா இருக்கிறாள்... அண்டைக்கு ஒரு வோயோடையும், இரண்டு கேள்ஸ்ஓடையும் ராஜா ஐஸ்கிறீம் சென்ரரில ஐஸ்கிறீம் குடிச்சத கண்டநான்......... உமாக்கு அந்த வோயில இன்ரஸ்ட் போல தெரியுது..... விசரிச்சுப் பார்..... என்னட்டையும் பொம்புளப்புள்ளைகள் இருக்கு கண்ணுக்குள்ள எண்ண ஊத்திக் கொண்டே இருக்கோணும்....

சரி வாறன் சிவா என்றவள் விடைபெற்று அகன்றாள்.

சிவகாமியின் தலையில் பாறாங்கல்லைத் தூக்கிவைத்துவிட்டு அபிராமி ஆறுதலாக நடக்கிறாள்..... **"பிறன்ஸ் கூடி ஐஸ்க்கிறீம் குடிக்கிறது தப்பா?" சாதாரணமான நிகழ்வு. எதவச்சி.... உமாவையும் ரவியையும் எடைபோடுகிறாள் அபிராமி?... அபிராமி அனாவசியமா எவரையும் குறைகூறவும் மாட்டாள்.** இத உமாவிட்ட கேட்டா நான் சந்தேகப்படுறன் எண்டு நினைப்பாள்.... ஒருவேளை அபிசொல்றது உண்மையா இருந்தா?..... அவள் சிந்தனையை அறுத்தாள் உமா...... "அம்மா! தாங்க பார்சல்கள," என்று ஆவலாக வாங்கிக் கொண்டு ஆரவாரத்துடன் உள்ளே நுழைந்தாள் உமா.

"சீ, இவளா காதல்..... கூதல் எண்டு..... சீ இன்னும் குழந்தைச் சுபாவம் மாறவில்லை...... படிக்கிற பிள்ளையின்ர மனதக் குழப்பக்கூடாது".... சிவகாமியின் மனம் ஓலமிட்டது. அம்மா! என்ன ஒரு மாதிரியா இருக்கிறீங்க நல்லொரு 'டீ' கொண்டுவரவா?

பெருமூச்சொன்றை விட்ட சிவகாமி இம் களைப்பாத்தான் இருக்கு............ ஒரு 'டீ' கொண்டுவா, சீச்சீ...... இவள் கள்ளம் கபடமற்றவள்.... சிவகாமியின் உதடுகள் உரைத்தது. * * * * * *

அன்று உமா ஏழு மணியாகியும் வீட்டிற்கு வரவில்லை. எல்லா இடமும் தேடியாச்சு.... எங்கேயும் இல்லை. மணி ஒன்பதையும் தாண்டியது.

மூர்த்தியின் பொறுமை அளவுகடந்தது. தன்மான உணர்வு தலைதூக்கித் தாண்டவமாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர மானத்தையே அழிச்சுப் போட்டாள். இனி எப்படி தலை நிமிர்ந்து நடப்பன்...... என்ர மானமே போச்சு.... விசர்பிடித்தவன் போல் கதறினார்.

என்னங்க..... கொஞ்சம் பொறுமையா இருங்க...

சும்மா போடி எல்லாமே உன்னாலதான்...... நான் மூதூருக்குப் போயிருவன் மாசம் ஒரு முறதான் வருவன்... என்ரவேல அப்படிப்பட்டது.... நீ வளத்த சீத்துவம்....... இனியும் நான் வாழ வேணுமா?...... ஆத்திரத்தில் கயிற்றை எடுத்து தூக்குப்போடப்போனார் மூர்த்தி.

என்னப்பா! நீங்க தூங்கிச் செத்தா இந்தப் பிரச்சின தீந்திருமா? உலகத்தில நடக்காததா இப்ப நடந்து போச்சு?.... நீங்க ஏன் வீணா உயிர விடோனும்? அந்தநாய் செத்தது எண்டு விடுவம். அயலவர்களும் ஒன்றுகூடி மூர்த்தியின் ஆதங்கத்தை அலைமோதவிடாது ஆறுதற்படுத் தினார்கள். * * * * * *

ஊர் முழுவதும் இக்கதை பரவலாயிற்று. **கௌரவமாக வாழ்பவனுக்கு ஒரு சிறு பிரச்சனை வந்தாலும் விரிவுபடுத்தி இன்பங்காணும் மானிட இயல்பு இங்கு மட்டும் என்ன மரணித்து விட்டதா.....?** என்ன? பலரும் பல மாதிரிப் பேசினார்கள்... தங்கள்.... தங்கள் பொறாமைக்கு ஒத்தனம் கொடுக்கும் வகையில். * * * * * *

சிவகாமியின் ஆழ்மனம் அவளை ஆட்டிப்படைத்தது... இருபது வருடங்களுக்கு முன்பு.... நாகேந்திரனின் நட்பில் பூத்த மலர்தான் உமா. இது மூர்த்திக்கு எங்கே புரியப்போகிறது... அவர் அடிக்கடி மூதூரிற்தானே காலங்கழித்தார்.... உமாவைச் சொல்லிக் குற்றமில்லை..... இதையறிந்தால் மூர்த்தி இறுதி மூச்சையே விட்டுவிடுவார்......வேண்டாம். அந்த முள் எனது இதயத்தையே இரணமாக்கட்டும்,..... தாயைப்போல பிள்ளை சிவகாமியின் உள்மனம் உறுத்தியது. * * * * * *

அன்று ஒரு போயா விடுமுறை...... வீட்டு வாசலில் ஒரு அழகிய பெண்பிள்ளை..... பதினெட்டு வயது இருக்கும். அம்மா! இது மூர்த்தி ஐயாவின் வீடா?......

ஓம்..... ஏனம்மா?.......



ஐயாவ ஒருக்கா பாக்கோணும்.....

அதே நேரம் மூர்த்தி உள்ளே இருந்து வெளியே வந்தார்.

அப்பா! என்று அலறிய வண்ணம் அந்த அழகு தேவதை மூர்த்தியைக் கட்டித் தழுவி அழுதாள்.

அழாதே நளினி.... அழாதே.... என்று ஆறுதற் படுத்த முனைந்தார் மூர்த்தி ஆனாலும் அவரால் முடியவில்லை...... அவளது ஆதங்கம் அழுகை ஆறாக ஓடியது..... "அம்மா கால்தவறி கிணத்தில விழுந்து செத்திட்டா மறுநாள் காலையில்தான் காணமுடிஞ்சுது.... ஈமக்கிரியைகள் முடிஞ்சுது ஒங்கள ஒப்பீசில போய்த்தேடினன் ஆறுநாளா நீங்க லீவு எண்டு சொன்னாங்க அங்கதான் அற்றஸ்வாங்கினன்"....... அங்க நான் தனியா இனி இருக்கேலாது!.... அழுகிறாள் நளினி, பரவாயில்லை..... நீ இங்கேயே இரு.... அதிர்ச்சியுடன் தகப்பனையும் மகளையும் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள் சிவகாமி. அவள் வாய் முணுமுணுத்தது. "நான் மட்டுமென்ன?..... தனது மகளை மீளப்பெற்ற திருப்தி அவளுக்கு.... ஆதங்கத்துடன் சென்று நளினியை அணைத்துக் கொள்கிறாள். அவருக்குச் சொந்தமான மகள் வந்துவிட்டாள்..... அவருக்குச் சொந்தமில்லாத மகள் ஓடிவிட்டாள்....... சிவகாமியின் ஆழ்மனம் உரசிக்காட்டியது. தாய்க்கு மட்டுந்தான் தெரியும் தந்தை யார் என்று. மூர்த்தியோ, பெரும் பிரளயத்தையே எதிர்பார்த்தவர் ஆனால், சிவகாமியோ, பெட்டிப்பாம்பாகி விட்டாளே, இது என்ன அதிசயம்? மூர்த்தியின் தேடல் இது.


மாவீரன் அலெக்ஸ்சாண்டர் தனது தளபதியிடம் கூறினாராம் "நான் இறந்த பின்பு எனது மரண ஊர்வலத்தின் போது எனது இரு கரங்களையும் விரித்து வையுங்கள்" தளபதி ஆச்சரியப்பட்டுக் கேட்டாராம் "எதற்காக?" "இவ்வளவு சாம்ராஜ்யங்களைக் குவித்த மன்னனாக இருந்தாலும், இறப்பின் போது ஒரு பிடி மண்ணை ஏனும் கொண்டு போக முடியாது. என்பதை மக்கள் உணர வேண்டும்" என்றார் மாவீரன் அலெக்ஸ்சாண்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை அடிமையின் புலம்பல்......

கவிவாணன்



நீங்கள் சிம்மாசனம்
அமர்ந்ததும், திரும்பிப்பார்க்க
மாட்டீர்கள்......
அடுத்த தேர்தல் வரை
எமது "நா" கேட்குமா?

ஐயா! அரசியல் வாதியே!!
ஜனநாயகம் காக்கப் புறப்பட்ட
புத்திரரே!....
சுதந்திரத்தை சுத்தியல்
கொண்டு சுக்குநூறாக்கும்,
சுற்றுலாப் பிரியர்களே!
நான் சுதந்திரத்தை
உங்களிடம் யாசிக்கவில்லை
அதை நான் உளமாற
நேசிக்கிறேன்.....

நான் போதைக் கடிமையானது;
உங்களாற்தான்!
தேர்தற் காலங்களிற்
தேடிவந்து
குதங்குதமாய்க்
குடிப்பதற்கு
சாராயத்தை சரமாரியாக
போதையேறும் வரை
ஊற்றுவீர்கள்...
போதை மயக்கத்தில்
சாராயத்தை யாசித்து,
வாக்குகளைக்
காணிக்கையாக்கினோம்.

தேடித், தேடி
ஊற்றினேன் சாராயத்தை
**நான் இங்கு போதைக்கடிமை**
**நீர், அங்கு பதவிக் கடிமை**
**பரவாயில்லை.**
**இருவருமே சுதந்திர**
**அடிமைகள் தான்.**

ஓ! தலைவா!!
காற்றைக் கிழிக்கும்
காளையாகத்தான் இருந்தேன்
அந்தக் கம்பீரத்தை
அடியோடு சாய்த்தவன் நீதான்
சாராயத்தால்,
சாம்ராஜ்யம் அமைப்பவன் நீ
என்போன்றோர்
அதன் தூண்களாகத்,
துவள்பவர்கள்தான்
சாராயச் சாம்ராஜ்யத்தை
தும்சம் பண்ணிவிட்டு
ஒரு மனிதனாக
செயற்படுங்கள்......
இன்னுமொரு சமூகமாவது
உருத்தேறட்டும்.



# முக்கிய இலக்கியங்களில்! துணைவியரின் துயரநிலைமைகள்.....

வயலற் சரோஜா



மிக முக்கியமான இலக்கியங்களை எடுத்து நோக்கினால், பெண்களின் நிலைமைகள் மிகப் பரிதாபகரமாக அமைந்திருப்பதை அவதானிக் கலாம். **கணவன்மார் தான் பெண்களுக்குக் கோட்டையும், அரனும் பாதுகாப்புமாக அமையவேண்டும்!** ஆனால்; முக்கிய மான இலக்கியங்களில் நிலைமை எதிர்மாறாகவே காணப்படுகிறது.

முதலில் மகாபாரதத்தை எடுத்து நோக்கினால், ஐந்து கணவன்மாரைத் துணையாகக் கொண்டவள் திரௌபதி. இவளது கணவன்மார்கள் சாதாரணமானவர்கள் அல்லர். **தருமத்திற்கு தருமர், யுத்தத்திற்கு அஞ்சாதவன், பீமன் சிறந்த வீரன் பார்ப்போர்க்கு அச்சத்தைத் தருபவன், அர்ச்சுனன் வில்வித்தையிற் துறைபோனவன், நகுலன் தவ வலிமை படைத்தவன். எதிரிகளை அஞ்சவைப்பவன், சகாதேவன் சோதிடக்கலையில் நிபுணன்.**

இவ்வாறான துறைபோனவர்களைக் கணவர்களாக அடைந்தும், சூதாட்டத்தில் அவளைத் தோற்ற பின்பு துரியோதனன் கட்டளை இட, துச்சாதனன் அரச அவையில் அனேகமானோர் முன்னிலையில் அவளது துயிலை உரிய, பேசா மடந்தைகளாக ஐந்து கணவர்மாரும் அடங்கியிருந்த அவலநிலை. திரௌபதி அழுதாள், புலம்பினாள் இறுதியில் மனந்தளராது, சபதமிட்டாள். அவளே வீராவேசம்கொண்டு முழங்கினாள்.

சிலப்பதிகாரத்தை எடுத்து நோக்கினால், கோவலன், மனைவியான கண்ணகியை தனிமையில் ஏங்கவிட்டுவிட்டு! நடனமாது மாதவியுடன் வாழ்ந்து பொருளாதாரத்தையே அழித்துவிட்ட பின்பே மனைவியை நினைத்து அவளுடன் மீண்டும் வந்து சேர்கிறான். இறுதியாக எஞ்சியிருந்த சிலம்பைக் கொடுக்கிறாள் கண்ணகி. இறுதியில் கணவன் கொலை செய்யப்பட்டான் என்பதைக் கேள்வியுற்று ஆறாத்துயர் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை[illegible]கிறாள். துயரம், கோபப்பிளம்புகளாக பீறிட்டுப் [illegible]கிறது. பாண்டிய மன்னனிடம் நீதி கேட்கிறாள். நிலைமையை உணர்ந்த மன்னர், மனச்சாட்சியில் வெந்து மடிகிறார், பாண்டிமாதேவியும் உடன் இறக்கிறார். மன உளைச்சலை ஈடுசெய்ய கண்ணகி பூம்புகாரையே தீக்கிரையாக்கி விட்டாள். இங்கு கண்ணகியின் நிலைமையும், பரிதாபமானதே. அவளும் வீராவேசம் கொள்கிறாள்.

அடுத்து இராமாயனத்தை சீர்தூக்கிப் பார்த்தால், "மனங்கொண்டதே மாளிகை" என எண்ணிய சீதாபிராட்டி கணவரான இராமரையே பின் தொடர்ந்து கானகம் செல்கிறாள். அங்கே அவளை இராவணன் கவர்ந்து செல்ல, அங்கே அவள் பல இன்னங்களுக்காளாகி துன்பப்படுகிறாள்.

இராமரும் மனைவியைக் காப்பாற்றும் பொருட்டு ஆஞ்சநேயரின் உதவியுடன் சீதையை மீட்கிறார். சீதையும் தீக்குளித்து தான் பத்தினி என்பதை நிரூபித்தும் விடுகிறாள். இராமர் அயோத்திக்கு அரசனாக இருக்கும் போது மாறுவேடத்தில் நாட்டின் நிலையறியப் புறப்படுகிறார்.

அங்கே இரண்டு சலவைத் தொழிலாளர்களது உரையாடல் அவரது உள்ளத்தை உறுத்துகிறது...

ஒரு தொழிலாளி "இன்று நான் சமையலே செய்யல்ல. தனிமை வேறு" என்று தனது மன ஆதங்கத்தை இறக்கி வைக்க, அடுத்த தொழிலாளியோ; "ஏனப்பா!, பேசாமல் உன் மனைவியைப் போய்க் கூட்டிவா. பிரச்சினை தீர்ந்துவிடும்" என்றான். அதற்கு அவன்..... "என்னை இராமர் என்றா எண்ணிவிட்டாய்? ஒருவன் கூட்டிக்கொண்டு போனபின்பு, அவளைக் கூட்டி வந்து குடும்பம் நடத்த?" என்றான். இராமர் உடனடியாக அரண்மனைக்குச் சென்று தம்பிமாரை அழைத்து, "சீதை தூயவள் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் எமது குடிமக்கள் அதை அறிந்துகொள்ளவில்லை. நல்ல கணவனை விட, நல்லரசனாகத் திகழ வேண்டும், எனவே சீதையை நான் நாடு கடத்துகிறேன்.

இராமனுக்கு இளையோர் கண்ணீர் வடித்துக் கலங்கி நின்றார்கள். இலட்சுமணனை நோக்கி சீதாபிராட்டியை "கங்காதீரத்தில் வாழ்ந்திருக்கும் ரிஷிகளின் ஆஸ்ரமங்களுக்கு அருகே விட்டுவிட்டு வந்துவிடு" என்றார்.



இலட்சுமணன், இராமர் கூறியது போல் சீதையை விட்டுவிட்டு இராமனின் இக்கட்டான நிலைமையைப் புரியவைத்துவிட்டு கண்ணீருடன் திரும்புகிறான்.

இடி இடித்தாற்போல் சீதை தரையில் வீழ்ந்தாள், மயக்கம் தெளிந்தபின்பு கதறினாள், பதறினாள், கங்கையில் மூழ்கி இறக்க நினைத்தாள். பின்பு இராமரின் வாரிசு வயிற்றில் இருப்பதை உணர்ந்தவளாக பரிதாபமாக அழுதாள்..... பதறினாள்.

அங்கே பிரசன்னமான வால்மீகி மஹரிஷி அவளுக்கு ஆறுதல்கூறி, "நல்லார்க்குத் தெய்வம் துணை" என்று நம்பிக்கையூட்டி ஆஸ்ரமத்திற்கு அழைத்துச்சென்று பெண்களுக்கான ஆஸ்ரமத்தில் விடுகிறார். அவள் நிலையும் பரிதாபத்திற்குரியதாகவே காணப்படுகிறது.

அடுத்து நாம் நளவெண்பாவைச் சீர்தூக்கி நோக்கினால், நள மகாராசா, சூதாட்டத்தில் நாடிழுந்தார். அனைத்தையுமிழந்த பின்பு நாட்டைவிட்டுப் புறப்பட்டார். மனைவியான தமயந்தி அவருடன் கூடவே புறப்பட்டாள். இருவரும் கானகத்தை அடைந்தபோது, இருட்டிவிட்டது. அங்கேயே நித்திரையாகி விட்டார்கள். ஆனால் நளமகாராசா கண்விழித்தார். இனிவரப்போகும் கஸ்டங்களை இவள் தாங்கமாட்டாள் என்பதை உணர்ந்து, அவளைக் கானகத்திலேயே கைவிட்டுச் சென்றார். அவள் கொடிய மலைப்பாம்பிடம் சிக்கியபோது வேடன் ஒருவன் அவளைக் காப்பாற்றினான்.

மறுகணம் அவளை மனைவியாக அடைய ஆசைப்பட்டான். தமயந்தியும் அவனைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கினாள். பின்பு பல இன்னல்களுக்குள்ளாகி நாடுபோய்ச் சேர்ந்தாள். மீண்டும் ஒரு சுயம்பரத்தின் மூலம் நளமகாராசாவை அடைகிறாள்.

அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன் வாய்மையைக் காப்பாற்றுதற் பொருட்டு, மனைவி சந்திரமதியையும், மகனையும் விற்றுவிடுகிறார். அவர்கள் தம்மை வாங்கிய கொடுமைக்காரனின் வீட்டில் மிகக் கஸ்டப்படுகிறார்கள். மகன் பாம்புதீண்டி இறந்ததை அறிந்த சந்திரமதி, பிணத்தை எரிப்பதற்குக்கூட, வழியின்றி வாடினாள் அழுதாள், புலம்பினாள், துன்பச் சூறாவளி அவளைத் துவைத்தெடுத்தது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் துயரங்களையும் சுமக்கும் சுமைதாங்கிகள் பெண்கள் **தானா?** கணவன்மார்கள் இருந்தும் ஏன் பெண்களை கதிகலங்க **விட்டார்கள்?** பெண்களுக்கேன் இந்த இழிநிலை? பெண்கள் முற்றிலும் கையாலாகாதவர்களாகச் சித்தரிக்கப்பட்டபோதும்,

கண்ணகியின் வீராவேசமும், பத்தினித் தன்மையும் அவளை "கண்ணகி அம்மன்" என்று தெய்வமாக்கிவிட்டது, அதேபோன்று திரௌபதியின் சபதம் வீரம் அவளையும் திரௌபதியம்மனாக்கிவிட்டது.

ஆனால் 19ம், 20ம் நூற்றாண்டுகளில் எத்தனையே பெண்கள் தமது வீரதீரங்களைச் சாதனைக் கல்வெட்டுக்களில் பதித்துள்ளார்கள். பல ஆண்களை மண்டியிட வைத்துள்ளார்கள், ஓட ஓட மிரட்டி அடித்துள்ளார்கள்.

**"இடிஆமீன்" பற்றி அறிந்தோர் அவன் ஒரு கொடூரமான கொலை வெறியன், பெண்பித்தன் என்பதை அறிவார்கள். காணும் அழகிய பெண்களை யெல்லாம் அசிங்கப்படுத்தி அழித்து விடுவான். அதைவிட இவனுக்குப் பல மனைவியர்கள். எவருமே இவனுடன் நின்றுபிடிக்கவில்லை ஆனால்;**

பேரழகியான "மதீனா" என்ற நாட்டியக்காரி அவனுக்கஞ்சி ஓடவில்லை. இவள் மட்டுமே அவனுக்கு எஞ்சியிருந்தாள். அவளைத் தினமும் கொடுமைப்படுத்தியது அந்த மிருகம்.

அவள் பொறுமை இழந்து தனது கைவரிசையைக் காட்டினாள். நாற்காலியை வீசி எறிந்து அவனைத் தாக்கினாள். அவனது கைஎலும்பு முறிந்தது. "அவன் பிழைத்தது அதிசயம்" என்று வைத்தியர்கள் கூறினார்கள். இப்போது புரிகிறதா பெண்ணின் வீரம் ஆனால் அவனைப் பிரியாது அவனுடனேயே வாழ்ந்தாள்.

"நான்ஸிரி" என்ற மல்யுத்த வீராங்கனை, மல்யுத்த வீரனான இடி ஆமீனை இரண்டுதரம் மண் கவ்வ வைத்தாள். பெண்களிடம் வீரமும், தீரமும் உண்டு என்பதை மறக்கக்கூடாது.

அனேகமாகப் பெண்கள் அபலைகள், பேதையர், மடந்தையர், கோழைகள், வெருண்டு ஓடும் புள்ளிமான்கள் என்றெல்லாம் கூறியதுடன்



இவர்கள் ஆண்களெனும் சிங்கம், புலிகளின் முன்பு நிற்கமாட்டார்கள் என்றெல்லாம் இலக்கிய சமூகநூல்களில் பண்டிதர்களும், வித்துவான்களும் எழுதி! பெண்களை..... ஒரேயடியாக மட்டந்தட்டி விட்டார்கள்.

ஆனால் உண்மைதான் என்ன? **பெண் சிங்கங்கள் இவர்களை ஈன்று எடுக்காமல்! இந்த ஆண் சிங்கங்கள் என்ன தானாகவா தோன்றினார்கள்?**

**பெண் சிங்கத்தின் பாலைக்குடித்ததுடன் அதன் பாதுகாப்பில்தான் ஆண்சிங்கங்கள் ஆளானார்கள் என்பதை எந்த ஆண்சிங்கமும் மறுத்துப் பேச முடியாது.**

**இன்னுமோர் உண்மை தெரியுமா? பெண்சிங்கங்கள் வேட்டையாடிக் கொண்டுவரும் மாமிசத்தைத்தான் ஆண் சிங்கங்கள் பறித்து உண்ணுமாம். பாவமென்று பெண்சிங்கமும் விட்டு விடுமாம். பெண்கள் பலவீனமானவர்கள் என்று தப்புக் கணக்கு போடவேண்டாம். உண்மையான வீரர்கள் பெண்கள் தான்.**

---

*** ஒரு துளிப்பொறாமை மாபெரும் சாம்பிராஜ்யத்தையே கவிழ்த்து விடும்.**

*** பிறர் மீது பொறாமைப் பட்டு, எரித்தது,**
**உன்னிடம் அவர்களைப் பற்றி வசைபாடுவோர்,**
**உன்மீதும் பெறாமைப்பட்டு வசைபாட அதிக நாளாகாது.**

*** பிறர் மீது பொறாமைப்படுபவன்**
**தனது சந்தோசத்தைத் தவிடுபொடியாக்குகிறான்.**

**ஒளவை சரோஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரும்புப் பெண்மணி

"நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி"

இங்கிலாந்திலும் ஆதிகாலத்தில் பெண் அடிமை நிலவியதுதான். பெண்கள் அடிமைகளாகத் தொழிற்சாலைகளில் வேலை வாங்கப்பட்டார்கள். ஏன் கர்பிணித் தாய்மார்கள் கூடக் கருணையின்றி நடத்தப்பட்டார்கள். வேலை செய்யாது களைத்து நின்றாற்கூட கசையடி காத்திருக்கும். புரட்சிகளின் பின்புதான் அங்கேயும் பெண்விடுதலை கிடைத்ததெனலாம். அதன்பின்புதான் சாதனைப் பெண்கள் தங்கள், தங்கள் திறமைகளையும், வலிமைகளையும், சாதனைகளையும் வெளிக்கொண்டு வந்தார்கள் எனலாம்.

அந்த வரிசையில் மார்கரெட் தட்சர் கூடப் பெரும் சாதனை படைத்துள்ளார். அவர் பயமற்ற, நெஞ்சுரம் கொண்ட பெண் என்பதாலேயே **'இரும்புப் பெண்மணி'** என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். இங்கிலாந்தின் சரித்திரத்தை மட்டுமல்ல, உலக சரித்திரத்தையே புதிய பாதைக்குத் திசை மாற்றிய பெருமை அம்மையாரையே சாரும்.

**பெண்களே இருந்தறியாத இங்கிலாந்தின் பிரதமர் நாற்காலியில் உட்காந்து ஆட்சி நடத்திய முதற்பெண்மணி மார்கரெட்தட்சர்தான் என்பதை உலகமே அறியும். அத்தோடு பிரதமர் பதவிக்கு தொடர்ச்சியாக மூன்றுமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமையும் தட்சர் ஒருவரையே சாரும்.**

தட்சர் முதன்முதலாக 1979ம் ஆண்டு பிரதமரானார். அப்போது தொழிற்சங்கவாதிகளின் செங்கொடிகளால் நாடே கலவரங்களைப் பூண்டிருந்தது. வேலைநிறுத்தப் போராட்டம், ஊர்வலம் என்று முழு நாடுமே ஸ்தம்பித்துப் போயிருந்தது. தட்சரோ பிரிட்டிஷ் ஏர்வேஸில் தொடங்கி அரசின் கட்டுப்பாட்டில் இருந்த அத்தனை நிறுவனங்களையும் துணிந்து தனியார் மயமாக்கினார்.

எதிர்ப்புக்கள் கிளம்பியபோது அதைப்பொருட்படுத்தாது, உறுதியாகச் சாதித்துக் காட்டினார் தட்சர். இத்தனைக்கும் அவர் சாதாரண



மளிகைக் கடைக்காரரின் மகளாகப் பிறந்து கல்லூரிக்குச் சென்று, வேதியலும், சட்டமும் படித்துவிட்டு மாதச்சம்பளம் வாங்கும் ஒரு உத்தியோகத்திற்தான் ஆரம்பத்திற் கடமையாற்றினார்.

**அவருக்கு எந்தவிதமான அரசியற் பின்னணியும் இருக்கவில்லை. ஆனாலும் அவருக்கு அரசியல் ஆர்வம் பிறக்கவே.... இரண்டுமுறை தேர்தலிற் குதித்தார். இரண்டு முறையும் தோல்வியையே சந்தித்தார். ஆனாலும் சளைக்கவில்லை. அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, சாதித்துக்காட்டும் பொருட்டு திடசங்கற்பம் பூண்டார்.**

1959ம் ஆண்டு நடந்த தேர்தலில் அவர் எம்.பி. ஆனார். 1970ல் மந்திரி ஆனார். 1979ல் பிரதமரானார். இங்கிலாந்தின் வசமிருந்த பாக்லேண்ட் தீவுகளை ஆர்ஜன்டினா ஆக்கிரமதித்தபோது, தட்சர் ஆவேசமாகப் போர் தொடுத்து மீட்டார்.

இதையடுத்து 1983ம் ஆண்டு நாடே எழுச்சியோடு கிளர்ந்தெழுந்து தட்சரை இரண்டாவது முறையாக பிரதமராக்கியது. இதனாலேயே "இரும்புப் பெண்மணி" என்று வர்ணிக்கப்பட்டார்.

தட்சர் உயிரோடு இருக்கும் வரை பிரதமரின் நாற்காலியில் தங்களது கட்சிக்கு இடம் கிடைக்கவே கிடைக்காது என்று எதிர்க்கட்சியினர் மனம் வெதும்பிக் கோசமெழுப்பினர். அந்தளவிற்கு தட்சர் அதிகாரத்தின் உச்சியிற் கொடிகட்டிப் பறந்தார். ஆனால்! **எழுச்சி என்று ஒன்றிருந்தால் நிச்சயம் வீழ்ச்சி என்ற ஒன்றும் இருக்கும்.**

1990களில் அவரது சொந்தக் கட்சி சகாக்களாலேயே பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். இருந்தாலும் இங்கிலாந்து சரித்திரத்தில் அழியா இடம்பிடித்த அம்மையார் இன்றும் உலகமக்கள் மத்தியில் சிரஞ்சீவியாகவே வாழ்கிறார்.

**மரணம் துரத்துகிறபோது ஆற்றலும், செல்வமும் அடிபட்டுப் போகும், தர்மம் ஒன்றே தங்கி நிற்கும். முதியோரை ஆதரிப்பதே பெரிய தர்மம்.**

சாணக்கியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகளுக்குக் காரணம் சந்தர்ப்பமா? முயற்சியா?......

ஞானி

**"வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்" உனது சிந்தனை எப்படியோ அப்படியே உனது வாழ்க்கையும்.** உலக சாதனையாளர்கள் பலரின் வாழ்க்கை வரலாற்றை "சாணக்கியன்" இதழ் நமக்கு தந்துள்ளது. சாதனையாளர்களில் ஞானிகளுமுண்டு, சமூக சேவையாளர்களுமுண்டு. உரிமைக்காகப் போராடிய உத்தமர் களும் உண்டு, சமூகத்தை விழித்தெழச் செய்த எழுத் தாளர்களும் உண்டு, சமூக வளர்ச்சிக்காக இரவுபகலாகப் பாடுபட்ட விஞ்ஞானி களுமுண்டு, அறிவியல் வித்தகர்களுமுண்டு, அரசியல்வாதிகளு முண்டு, சர்வாதிகாரிகளுமுண்டு, விளையாட்டு வீரர்களுமுண்டு, இசைஞானிகளுமுண்டு.

**நீ யாராக வர விரும்புகிறாயோ அப்படியே நீயும் வருவாய். முதலில் விருப்பம் வேண்டும். அதில் ஆசை வேண்டும். அதை எப்படியும் அடைவேன், சாதிப்பேன் என்ற நம்பிக்கை வேண்டும். அவா வேண்டும். இவைகள் மட்டும் இருந்துவிட்டால் போதாது, மேலும் என்னதான் வேண்டும் என்றுதானே கேட்கிறீர்கள்?**

1. முதலில் இலக்கைச் சரியாக நிர்ணயித்தல் வேண்டும். உதாரணமாக வைத்தியர் அல்லது அரசியல்வாதி, பொறியியலாளர் இவ்வாறு நிர்ணயிக்கும் போது **உங்களுக்குள் இருக்கும் மாபெரும் சக்தியை நம்புங்கள். எடைபோடுங்கள். குருவியாகப் பிறந்தால் கூடுதான் கட்டலாம், ஆனால் நீங்கள் மனிதர்கள் மாளிகை கட்டக் கூடியவர்கள் அதை மறவாதீர்கள்.**

2. திட்டமிட்டு உங்களுக்கெனப் பல கொள்கைகளை வரையறுத்து விடுங்கள். உதாரணமாக உலகப் புகழ்பூத்த மேதைகளும் உண்டு. 27 வயதில் வைத்தியராக அல்லது பிரபல்ய வர்த்தகராவது, 30 வயதிற் திருமணம், **மதுவையோ, சிகரட்டையோ தொடமாட்டேன் என்ற வைராக்கியம். "சராசரி மனிதர்கள் போன்று காதல் வலையில் வீழ்ந்து கருகமாட்டேன்" என்ற மனவலிமை.**

3. உன்னை நீ உனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள் பிற உணர்வுகள் உன்னை அடிமைப்படுத்த இடமளிக்காதே. உனக்கு நீ தான் தலைவன்.

4. வழிதவறிப் போகாதீர்கள். உங்கள் இலக்கை நோக்கியே உங்கள் ஓட்டம் அமையட்டும் எந்தப் பராக்கிற்குக்கும் இடமளிக்காது ஓடுங்கள். இலட்சியம் என்னும் வெற்றிக் கிண்ணத்தை நிச்சயம் பெறுவீர்கள்.

5. மணித்தியலாங்களை! வீனே அரட்டை அடிப்பதிலும், தொலைக்காட்சி பார்ப்பதிலும் தொலைத்து விடாதீர்கள். சிலருக்கு கதை கண்ட இடம் கைலாயம் எனவே **எப்போதுமே உங்களை நீங்கள் கட்டுப்பாட் டிற்குள் வைத்து விடுங்கள்.**

6. **போட்டிகள், பொறாமைகள், கண்டனங்கள், ஆரோக்கியமற்ற விமர்சனங்கள் இவற்றிற்கு துணிச்சலுடன் முகங்கொடுங்கள்.**

7. முதலீடுகள் இல்லாமலே வாழ்வில் உயர்ந்த நிலையை அடையலாம். இதற்கு சாதனையாளர்களே சான்றானவர்கள்.

8. **தயக்கம், வெட்கம், தெரியாது, முடியாது, அது கஸ்டம், பயம் போன்றவற்றை உங்கள் வாழ்க்கையில் இருந்து நீங்கி விடுங்கள். இவைதான் உங்கள் முன்னேற்றத்தின் எதிரிகள் மறவாதீர்கள்.**

9. உங்களை வெற்றியின் உச்சிக்கு மகிழ்ச்சியோடு உயர்த்திவிடக் கூடியவர்களை நீங்கள் தேடிக் கண்டுபிடித்து பயன்பெறவேண்டும்.

10. ஒரு தரம் முயற்சித்தால் மட்டும் போதாது. தொடர்ந்து விடாது முயற்சிக்க வேண்டும். **சந்தர்ப்பங்கள் எம்மைத் தேடி வரமாட்டாது, நாம்தான் முயற்சி செய்து சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும்.**

**மாவீரன் நெப்போலியன் கூறினான்** "முடியாதென்பது எனது **அகராதியிற் கிடையாது**" அவ்வாறு நீங்களும் உறுதி பூணுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உன்னை நீ நம்பு இமயத்தையும் பெயர்க்கலாம்".**

மின்குமிழ் முதற்கொண்டு கிறம்போன், டோச்லைற் போன்ற 162 மின் உபகரணங்களைக் கண்டுபிடித்து சாதனைபடைத்த "தொமஸ் அல்வா எடிசன்" பாடசாலைக் கல்வி அறிவே இல்லாதவர். இவரை மடையன், மக்கன், லூசன் என்றெல்லாம் ஆசிரியர்கள் எள்ளிநகையாடி ஒதுக்கியதால், முறைசார் கல்வியைப் பாதியில் இழந்தார். அவ்வாறான ஆசிரியர்களால் ஒரு மின்விளக்கையேனும் தயாரிக்க முடிந்ததா என்ன?...... "முட்டாள்" எனப்பட்டவர் முயன்றார். புகழ் முடியைச் சூடிக்கொண்டார்.

உலகப் பணக்காரரான "பில்கேட்ஸ்" கணனியின் வின்டோஸ் தயாரிப்பாளர் கூட பாடசாலைக் காலத்தில் சகமாணவர்களால், "நாற்றம்" என ஒதுக்கிவைக்கப்பட்டவர்தான். காரணம் அவர் தினமும் குளிப்பதில்லையாம். 12 வருடங்கள் தொடர்ந்து உலகப் பணக்காரராக சாதனை படைத்தார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் இலிங்கன் கூட, கூலித்தொழில், ஆடுமேய்த்தல் போன்றவற்றைச் செய்தவர் தான். இரவற் புத்தகங்களை வாங்கி தெருவோர விளக்குகளிற் படித்து அமெரிக்காவின் ஜனாதிபதியாகிச் சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவின் தமிழ்நாட்டின் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த 'காமராஜர்' கூட ஆரம்பகாலத்தில் புடைவைக்கடையில் விற்பனையாளராகச் சேர்ந்தவர்தான். இன்று அவரது பெயரை உச்சரித்த வண்ணம் பிரம்மாண்டமாக நிமிர்ந்து நிக்கிறது அந்தக் "காமராஜா பல்கலைக்கழகம்". ஆயிரக்கணக்கான கல்விமான்களை வளர்த்தவண்ணம் மதுரைக்கு மணம்பரப்புகிறது. தமிழ்நாட்டில் இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தவரும் அவரே.

இடி அமீன்கூட இராணுவ முகாமில் உதவிச் சமையற்காரணாகத்தான் ஆரம்பத்தில் இருந்தான்.

ரஷ்ய நாட்டின் சர்வாதிகாரியான 'ஸ்டார்லின்' கூடச் செருப்புத் தைக்கும் செம்மானின் மகன்தான். ஸ்டார்லின்கூட, செருப்புக்களைப்



பழுது பார்த்துப் புதுப்பிக்கும் தொழிலையே ஆரம்பத்திற் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.ஜி.ஆர் கூட ஒரு காலத்தில் வறுமையால் வாடியவர்தான். நாடகக் கொட்டகைகளில் பெண்வேடத்தில் நடித்தவர்தான். "அசோக் குமார்" என்ற படத்தில் தியாகராஜபாகவதர் கதாநாயகனாக நடித்தார். அப்படத்தில் ஒரு சேவகனாகத்தான் எம்.ஜி.ஆர் நடித்தார். பிற்காலத்தில் தமிழ்நாட்டில் முதலமைச்சராக வரவில்லையா?

எல்லோருமே பிறந்தவுடன் எழுந்து நிற்கவில்லை. ஆடு, மாடு போன்ற மிருகங்கள் கூட பிறந்து சில நிமிடங்களில் எழுந்து நிற்கும். ஆனால் மனிதன் பிறந்ததும் மறுபக்கம் தன்னும் திரும்ப முடியாமலேயே இருந்தான் என்பதை நாம் அசைபோட்டு மீட்டிப் பார்க்க வேண்டும்.

சாதனையாளர்கள் அத்தனைபேரும் வசதியான குடும்பங்களிற் பிறந்தவர்கள் அல்லர். சாதாரண ஏழைக்குடும்பங்களிற் பிறந்தோரே அதிகம். இவர்களைச் சந்தர்ப்பங்கள் தேடிவரவில்லை. இவர்களது விடா முயற்சியாலும், நம்பிக்கையாலும், நன்றி உணர்வாலும் இவர்களே சந்தர்ப்பங்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்கள்.

இதேபோன்று, பாடலிலும், நடனத்திலும், சாதனை படைத்தவர் "மைக்கல் ஜக்சன்" இவர்கூடச் சாதாரண குடும்பத்திற் பிறந்தவர்தான். குத்துச்சண்டைவீரன் "பற்றசன்கிளே" குங்பூளுக் கொரு "வுறூஸ்லீ" போன்று, பல்துறைகளிலும் பல்வேறுபட்டோர் சாதனை படைத்துள்ளார்கள்.

முதலில் தன்னைத்தான் இனங்காணவேண்டும். தனது திறமைகள் என்ன? பலம் எது? பலவீனம் எது? நல்ல குணங்கள் எவை? தீயகுணங்கள் எவை? தன்னை யார் என்று இனங்கண்ட பின்பு பிறரையும் ஏற்றுக் கொண்டு, பிறருக்கு உதவிகள், ஒத்தாசைகள் புரிவதன் மூலம், அவர்களது ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொண்டு வெற்றிச் சாதனை படைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோம்பலையும், நான் என்ற மமதையையும், சுயநலவெறியையும், ஏமாற்று வித்தையையும், பிறரைத் தூற்றி ஆவலாதி, அவதூறு பேசுவதையும் முற்றாக ஒதுக்குங்கள். முன்னேற்றம் நிச்சயம்.**

கெலன்கெல்லர் என்ற பிரபல்ய ஆங்கில எழுத்தாளர் கூட, நான்கு வயதில் ஏற்பட்ட நோய்காரணமாக, கண்பார்வையை இழந்தார். செவிப்புலனையும் இழந்தார். பேச்சாற்றலையும் இழந்தார் ஆனால் அவர் ஒன்றை மட்டும் கடைசிவரை இழக்கவில்லை அதுதான் அசைக்கமுடியாத நம்பிக்கை என்ற அத்திவாரத்தை. முயன்றார்..... முயன்றார்..... அவரது முயற்சி திருவினையானது புகழ் ஏணியிற் பிரகாசித்தார்.

உலகப்புகழ் பெற்ற 'சிம்பொனி' 'சொனாட்டா' போன்ற பல்வேறு வாத்திய இசைகளின் கோர்வைகளை உருவாக்கி உலகப் புகழ்பெற்ற பீத்தோவன், மொசார்ட், பாஹ் போன்ற பிரபல்யங்கள் கூட அவர்களது இறுதிக்காலத்தில் உணவிற்குக்கூட வழியில்லாது வாடினார்களாம். இசையை இரசிக்கத் தெரிந்த பணம் படைத்தோர்க்கு! அவர்களது வயிற்றுப் பசியைக் கூடப் போக்கத் தெரியவில்லையே.

---

* **எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும்,**
**இலக்கை அடைய வேண்டும்**

* **பூவில் வாசம் போல்,**
**என்ணெய்வித்துக்களில் எண்ணெய்போல்,**
**விறகில் நெருப்பைப்போல்,**
**பாலில் நெய்யைப்போல்,**
**கரும்பில் சீனிபோல்,**
**கடவுள் நமது சரீரத்தில் உறைகிறார்.**
**புத்திசாலியானவன் இதனை உணரக்கடவான்.**

* **தர்மத்தைச் சார்ந்திருப்பவன் செத்த பின்பும் வாழ்கிறான்.**
**தர்மசிந்தையற்றவனோ வாழும்போதே செத்தவன் தான்.**
சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்திலிருந்து





# நட்பு என்றால் நட்புத்தான்

**ஒளவை சரோஜா**

---

பாண்டவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள். வன வாசமும், ஒருவருடம் அஞ்ஞான வாசமும் முடித்து விட்டனர். நியாயப்படி தங்கள் நாட்டைத் திரும்பப் பெறும் பொருட்டு யுத்தம் செய்ய முற்பட்டனர். அப்போது சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தும் முகமாக பகவான் கிருஷ்ணர் பாண்டவர்களின் தூதுவராக அஸ்தினாபுரத்திற்குச் சென்றார்.

நடந்தது என்ன? துரியோதனனோ "ஊசிமுனை அளவு நிலங்கூட பாண்டவர்களுக்கு அளிக்கமுடியா"தென்று உறுதியாகவும், இறுதியாகவும் கூறிவிடவே! தூது சென்ற கிருஷ்ணர் மீண்டும் பாண்டவர்களிடம் செல்ல முற்பட்டபோது, அவரை வழியனுப்பி வைப்பதற்காக பீஷ்மர், விதுரன், கர்ணன் முதலானோர் நகரத்து எல்லைவரை சென்றனர்.

கிருஷ்ணர் எல்லோருக்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டு, கர்ணனை மட்டும் தேரில் ஏற்றிக் கொண்டார். தேர் சிறிது தூரம் சென்றதும், கர்ணனை நோக்கி "கர்ணா! நான் இப்போது உன்னிடம் ஒரு இரகசியத்தைத் தெரிவிக்கப் போகிறேன். இதுவரை நீ உன்னை ஒரு தேரோட்டியின் மகன் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய் ஆனால், உண்மை அதுவல்ல. குந்திதான் உனது தாய் சூரிய பகவானின் அருளினாற் பிறந்தவன் நீ கன்னிப்பருவத்திற் பிறந்ததால், சமூகத்தின் வசைமொழி களுக்கஞ்சி, உன்னை ஒரு பேழையில் வைத்து ஆற்றில் விட்டுவிட்டாள்"

உன்னை எடுத்து வளர்த்தவர் தான் தேரோட்டி, எனவே நீதான் பாண்டவர்களுக்கு மூத்தவன். நீங்கள் அறுவரும் இணைந்து நின்றால் மூவுலகைக்கூட வென்று விடலாம். எனவே நீ துரியோதனனை விட்டு, விட்டு பாண்டவர்களுடன் சேர்ந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாளே உனக்கு இராஜ்யா பிஷேகம் செய்து, தர்மரை உனக்கு இளவரசராக இருக்க ஏற்பாடு செய்கிறேன். நீ ஏற்றுக் கொண்டால் மட்டுமே. கர்ணா! உனது விருப்பம் யாதோ? என்றார்.

கிருஷ்ணர் எதிர்பார்த்த மாதிரி, 'ஆஹா! நான் பாண்டவரின் அண்ணனா? இதை உலகறியச் செய்ய வேண்டும். தம்பி உள்ளவன் போருக்கஞ்சான். ராஜ்யாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறவில்லை! மாறாக "வாசுதேவரே! நீங்கள் கூறியதெல்லாம் உண்மைதவிர வேறில்லை ஒப்புக்கொள்கிறேன். நீங்கள் கூறியபடி நான் பாண்டவர்களுக்கு மூத்தவன்தான். இருந்தாலும் துரியோதனன் என் ஆருயிர் நண்பனல்லவா?

அன்று அவையோர் **மத்தியில் "தேரோட்டியின் மைந்தன்" என்று அனைவரும் என்னை எள்ளிநகையாடியபோது, பாண்டவர்களும் சேர்ந்து பரிகாசம் செய்தார்கள். அவ்வேளையில் அவையின் முன் கம்பீரமாக எழுந்து அங்கதேசத்திற்கு என்னை அரசனாக்கி சம அந்தஸ்தை அளித்து என் மானங்காத்தவன் எனது நண்பன் துரியோதனனே. அதுமட்டுமா? நான் அவர்களது சொத்துக்களை எடுத்துத்தான் தாராளமாகத் தானதர்மங்களைச் செய்கிறேன். அதைத் துரியோதனன் கண்டுகொள்வதே இல்லை. அது அவனுடைய பெருந் தன்மை.**

**என்னையே முழுமையாக நம்பியிருக்கும் அவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதற்கு எனது மனச்சாட்சி ஒருபோதுமே இடமளிக்காது. அவனது உப்பை உண்டு வாழ்ந்தநான் ஒருபோதும் மனதாற்கூட அவனுக்குத் தீங்கிழைக்க மாட்டேன். நீங்கள் எந்தப் பக்கம் நிற்கிறீர்களோ அந்தப் பக்கமே வெற்றி நிச்சயம் என்பதை நான் நன்குணர்வேன். ஆனால்! யுத்தம் செய்து கொண்டே வீரமரணத்தைத் தழுவுவதே சத்திரியனான எனது கடமை. ஆகவே கண்ணா என்னை மன்னித்து விடுங்கள். என்றார் கர்ணன்.**

கர்ணா! நான் என்ன சொல்லியும் என் பேச்சைக் கேட்க மறுக்கிறாய். சரி உன் இஷ்டம் போலவே செயற்படு எனக்கூறிய கண்ணன் தேரை நிறுத்தினார்.



அப்போது கர்ணன், கிருஷ்ணா! நீங்கள் எனக்கொரு வாக்குறுதி அளிக்க வேண்டும். "நான்தான் அவர்களின் தமையன் என்பது தருமருக்குத் தெரிய வேண்டாம். அப்படித் தெரிந்தால் தர்மாத்மாவான அவர் உடனே இராஜ்சியத்தை எனக்களித்து விடுவார். நானும் நண்பன் துரியோதனனிடமே கொடுத்து விடுவேன். பின்பு பாண்டவர்கள் நாட்டை இழந்து நிற்கவேண்டிய நிலை ஏற்படும். எனவே இவ்விடயம் தர்மருக்குத் தெரிய வேண்டாம். நீங்கள் அவர்களுடன் இருப்பதால் பாண்டவர்களே நிச்சயம் வெற்றி பெறுவார்கள், மேலும் அவர்களது இராச்சியம் அவர்களையே சேரும்.

மகாபாரத யுத்தம் ஆரம்பிக்க ஆயத்தமானபோது, போரில் தலைமை ஏற்கக்கூடிய சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தில், பீஷ்மர் எல்லோர் முன்னிலையிலும் கர்ணனை சாதாரண வீரன் என்றும் தலைமை தாங்க அருகதையற்றவன் என்றும் கூறி அவமானப்படுத்தி விட்டார். எனவே கர்ணன் கோபங் கொண்ட வனாக "பீஷ்மர் யுத்தத்தில் தளபதியாக இருக்கும்வரை நான் போரிட மாட்டேன்" என்று கூறிவிட்டான்,

பத்தாவது நாள் போரில் பீஷ்மர் அர்ச்சுனனால் வீழ்த்தப் பட்டார். அவ்வமையம் அனைவரும் யுத்தத்தை நிறுத்திவிட்டு அம்புப் படுக்கையில் இருந்த அவரைக் காணவந்தனர்.

**இறுதியாகக் கர்ணன் வந்தான். "தாத்தா"! தேரோட்டியின் மகன் கர்ணன் தங்களை நமஸ்கரிக்கிறேன்**" என்றான். கர்ணனின் குரல் கேட்டதும் பீஷ்மர் அவனை அருகே அழைத்து

"குழந்தாய்! நீ மாவீரன் படைகளை தலைமை தாங்கி நடத்திச் செல்லும் திறமை படைத்தவன் என்பதை அனைவருமே அறிவார்கள். அன்று நான் உன்னை மட்டந்தட்டிப் பேசியதற்கும் காரணம் உண்டு, இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்தவே அந்த யுக்தியைக் கையாண்டேன். துரியோதனன் உன்னையே பெரிதும் நம்பி இந்த யுத்தத்தை ஆரம்பிக் கிறான். நான் உன்னை இகழ்ந்து பேசினால் நீ துரியோதனனைப் பிரிந்து சென்று விடுவாய் துரியோதனனோ மனமுடைந்தவனாக போரை நிறுத்தி விடுவான் என்று தப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

'எது நடக்க இருந்ததோ அதுதான் நடக்கிறது". என்னை மன்னித்து விடு என்றார். கர்ணனோ மௌனியாக நின்றான். மகனே! நீ தேரோட்டியின் மகனல்ல குந்தியின் மகன் சூரியபகவானின் புதல்வன். பாண்டவர்களின் தமையன். இவற்றை அறிந்த பின்னாவது நீ துரியோதனனை விட்டுவிலகி பாண்டவர்களுடன் இணைந்துகொள் என்றார் பீஷ்மர்.

தாத்தா! என்னை மன்னித்து விடுங்கள் இவை அனைத்தையும் நான் நன்கு அறிவேன். **துரியோதனன் என் ஆருயிர் நண்பன். அவனுக்குத் துரோகமிழைப்பது தர்மமாகுமா? ஆபத்துக்காலத்தில் அருகிருந்து உதவுபவனே உண்மைநண்பன். நான் அவனுக்குக் கடைசிவரை துரோகம் இழைக்கமாட்டேன்.**

பீஷ்மர் கர்ணனை ஆசிர்வதித்தார்." நீ உற்சாகமாகப் போர்புரிந்து கடமையை நிறைவேற்று" என்றார்.

தூய நட்பிற்கு துரியோதனனதும் கர்ணனதும் நட்பு பெரிய தொரு எடுத்துக்காட்டு **இக்காலத்தில் அற்பபொருளுக்காகவே நட்பை நரபலியாக்கி விடுகிறார்கள். பொறாமையினால் பொசுங்குகிறார்கள். பழிவாங்குகிறார்கள். ஆனால் கர்ணன் இராஜ்யத்திற்கோ, புகழுக்கோ அடிமையாகி விடவில்லை. துரியோதனனை பெரியோர்கள் தீயவன் என்று உரைத்தபோதும், தனது தூய நட்பை நிலைநாட்டி துரியோதன னுக்காகவே வீரமரணமடைந்தான்.**

இவ்வாறான நட்பு இக்காலத்தில் சாத்தியமாகுமா? பணமும் பதவியும், மண்ணாசையும், பெண் ஆசையும் தூய நட்பை வாழவிடுமா? அல்லது நட்பிற்குக் கல்லறை எழுப்புமா?.....

**"தனது நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிடப் பெரியது வேறொன்றும் இல்லை"**

யேசுபிரான்



# தீவிரவாதம் வளரக் காரணம் என்ன?

**அறிவழகன்**



முஸ்லிம் தீவிரவாதிகளின் கோபத்திற்கு ஆளாகி இருக்கும் நாடு இஸ்ரேல் ஆகும். இந்த நாட்டு மக்கள் தான் யூதர்கள். இவர்கள் பழங்காலத்தில் ஹீப்ருக்களின் சந்ததி யாவார்கள். கி.மு. 15ம் நூற்றாண்டளவில் தற்போது பாலஸ்தீனம் என்று அழைக்கப்படும் பகுதியில் குடியேறியவர்கள் இவர்கள்.

**உலகிலேயே அதிகமான எண்ணிக்கையில் கூட்டங் கூட்டமாகப் படுகொலை செய்யப்பட்ட இனம் ஒன்று உண்டு என்றால், அது யூதர்கள்தான்!** ஹிட்லர் ஆட்சியில் ஜெர்மனியில் இந்தப் படுபாதகச் செயல்கள் நடைபெற்றன. அதற்கு முன்பே இவர்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு கோடி ஐம்பது இலட்சமாக இருந்தது. இவர்களில் அண்ணளவாக அறுபது இலட்சம் யூதர்களை ஜெர்மனியில் படுகொலை செய்துவிட்டார்கள்.

1897ல் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தை மீட்டுத் தரும் இயக்கமொன்று தொடங்கப்பட்டது. இதற்கு "சியான் இயக்கம்" என்று பெயர் 1948ம் ஆண்டுவரை, பாலஸ்தீனத்தை ஒரு விசேட பொறுப்பாக எடுத்துக்கொண்டு, பிரிட்டன் ஆண்டுவந்தது.

யூதர்களுக்கும், அராபியர்களுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தச் செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் தோற்றுப் போயின. எனவே, பிரிட்டன் இனப்பிரச்சினையை ஐ.நாவுக்கு கொண்டு சென்றது. 1948ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி அன்று புதியதொரு இஸ்ரேல் நாடு உதயமாயிற்று. பிரிட்டனின் ஆதிக்கம் ஒரு முடிவிற்கு வந்தது. அப்போது யூதர்களின் எண்ணிக்கை யூதர்களின் எண்ணிக்கை 6.50,000 ஆகும். அராபியர்களின் எண்ணிக்கை 10,00,000 கிடுகிடுவென இஸ்ரேலியரின் சனத்தொகை வளர்ந்துவிட்டது. இப்போது இஸ்ரேலின் 90% மக்கள் யூதர்களே. இஸ்ரேலை அமெரிக்கா ஆதரித்தது. எனவே முஸ்லிம் தீவிரவாதிகள் அமெரிக்காமீது கடும்கோபம் கொண்டனர்.

2001 செம்டம்பர் 11ம் திகதி இடம்பெற்ற தீவிரவாதிகளின் தீரச் செயலை எவராலும் மறக்க முடியாது. உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. உலகத்தையே ஆட்டிப்படைக்கும் அமெரிக்க வல்லரசுக்கு நேரடியான அறைகூவல் இதுவாக அமைந்தது. இந்தச் சவாலை சமாளிக்கச் சர்வதேச நாடுகளும் ஒரே குரலில் கண்டனம் தெரிவித்தன. அமைதியை விரும்பும் அத்தனை நாடுகளும் கைகொடுத்தன.

2001 செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்த உலக வணிக மையத்தின் மீது அல்-கொய்தா தீவிரவாதிகள் விமானங்களை கடத்தி வந்துமோதி அதைத் தகர்த்தனர். இந்தத் தாக்குதலில் 110 மாடிக் கட்டடம் தரைமட்டமானது.

அமெரிக்க ராணுவத் தலைமையிடமான பென்டகனில் ஒரு விமானத்தை மோதி வெடிக்கச் செய்தனர். மற்றொரு விமானம் சாங்ஸ் வில்லேவில் விழுந்து நொறுங்கியது.

இதில் விமானங்களைக் கடத்திய 19 பயங்கரவாதிகள், விமானப் பயணிகள் உட்பட சுமார் 3 ஆயிரம் பேர் பலியானார்கள். 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அமெரிக்கா எதிர்கொண்ட மிகப்பெரிய பகங்கரவாதத் தாக்குதல் இதுவாகும்.

இந்தத் தாக்குதலுக்குக் காரணமான அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமாபின்லேடன் அமெரிக்கப் படையினரால் 2011 மே மாதம் கொல்லப்பட்டார். அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா கூறியுள்ளார் "பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்க அமெரிக்க அரசு உறுதி பூண்டுள்ளது" என்று.

"ஒசாமாபின்லேடனின் அமெரிக்கத் தாக்குதல் அமெரிக்கா ஒரு பாதுகாப்பான இடமெனக் கருதப்பட்ட நிலையில் பின்லேடனுக்கு ஒரு வெற்றிதான்" என்று பிரின்சன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரான யூலியன் செலிசார் கூறுகிறார். மனித உயிர்களுக்கு ஏற்பட்ட அனர்த்தத்தின் மூலம் அமெரிக்க தேசிய பாதுகாப்பில் குறைபாடுகள் இருப்பதை இச்சம்பவம் பிரதிபலிக்கின்றது.

நியூயோர்க், வொஷிங்டன் நகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் மக்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். இத்தாக்குதல், அமெரிக்கப் படைகள் முஸ்லீம் நாடுகளில் கொல்லப்படுவதற்கும், உலக வல்லரசாகத் திகழ்ந்த அமெரிக்க ஆதிக்கம் நாளடைவில் மங்கும் நிலைக்கும் தள்ளப்பட்டது.



இத்தாக்கலின் பின்பு ஒஸாமா பின்லேடனின் கோட்டையாகக் கருதப்பட்ட ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. இதனால் அமெரிக்காவும் பாரிய நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அமெரிக்காவில் நிலவிய சுதந்தரத்தை துஷ்பிரயோகம் செய்து ஒசாமா தற்கொலைப் போராளிகளை அனுப்பி சிறிய குறடுகள் மற்றும் சிறிய கருவிகள் மூலம் விமானங்களைக் கடத்தி எரிபொருள் நிரப்பிய குண்டுகள் மூலம் அமெரிக்க பொருளாதார அரசியல் மையத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டார். நம்புவதற்குக் கஸ்டமான இச்சம்பவம், மயிர்க்கூச்செறியும் தாக்குதலாகவே கருதப்பட்டது.

அமெரிக்க கூட்டுப்படைகளின் தளபதியான அட்மிரல் மைக்முல்லன், "எமது தேசிய பாதுகாப்பிற்கு பெரிய அச்சுறுத்தலாக இருப்பது எமது கடன் சுமையே" என்று கூறியுள்ளார்.

இந்தத் தீவிரவாத நிலை இந்தியாவிற்கும் ஏற்பட்டுள்ளது. 2011 செப்டம்பர் 7ம் திகதி டில்லி உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 13 பேர் உயிரிழந்தனர். 75க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது போன்று பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் உலக நாடுகளில் நடந்துவருவதை அவதானிக்கலாம்.

இந்த வன்முறை வளர்வதற்குக் காரணங்கள் தான் என்ன?

1. மக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஜனநாயக முறைப்படி போராடுகிற போது, ஆட்சியாளர்கள் தங்கள் சுயநலனுக்காக அவர்களை அடக்க முனைகின்றனர். அப்போதுதான் வன்முறை வெடிக்கிறது. இந்த வன்முறையே திட்டமிட்டு நடத்தப்படும்போது, பயங்கரவாதமாக மாறுகிறது.

சொந்த நாட்டு மக்களையே கண் மண் தெரியாமல் சுட்டுக் கொல்வது அரசின் பயங்கரவாதம் இல்லையா? இங்கே தீவிரவாதமும், பயங்கரவாதமும் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் தீவிரவாதம் வேறு, பயங்கரவாதம் வேறு.

**தீவிரவாதத்துக்கு ஒரு கொள்கையும், கோட்பாடுகளும் உண்டு. பயங்கரவாதங்களுக்கு எந்தவிதக் கொள்கையோ, கோட்பாடுகளோ கிடையாது.**

இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய காந்தியும், திலகரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் வரலாற்றில் வர்ணிக்கப் படுகின்றனர்.

சத்தியாக்கிரகங்கள், பேச்சுவார்த்தைகள் போன்றவை பலனளிக்காது போனால் தீவிரவாதமே தலைதூக்கும். சர்வதிகார ஆட்சிமுறை, அடக்குமுறை, அரசியல் இரட்டை வேடங்கள், அரசியல் வாதிகளின் சுயநலப் போக்குகள், அதிகார ஆதிக்கம், நியாயமற்ற தீர்மானங்கள், திட்டங்கள், பக்கச்சார்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றால் தீவிரவாதம் தலைதூக்கி நியாயம் கேட்கிறது. நியாயம் கிடைக்காதவிடத்து மேலும் தீவிரமடைகிறது.

ஆங்கில அரசிடம் இருந்து சுதந்திரம் பெற்ற போதும், சுதந்திர நாட்டின் அரசுகளும், ஆங்கில அரசு போன்றே பல அடக்குமுறைச் சட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டு சுயநலம் தேடுகிறது.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடிய விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பார்க்கும் இந்திய அரசு, இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று இனப்படுகொலைகளைப் புரிந்த இலங்கை அரசின் அரசியற் பயங்கரவாதத்தைக் கண்டு கொள்ளாது! இலங்கை அரசை ஆதரித்தது உண்மையே.

“பயங்கரவாதத்தை அடியோடு அழிப்போம்” என்று அறைகூவலிட்ட அமெரிக்கா கூட, வியட்நாம்முதல் ஈராக்வரை போரை உருவாக்கி முடிவில் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டது. “ஊருக்குத்தான் உபதேசம்” என்பதில் முன்னிலைவகித்தது.

**“உண்மையான போர் என்றால் தீயவற்றை வேரோடு பிடுங்கி எறிவதுதான்” என்றார் காந்திமகான். பயங்கரவாதத்தையும் வேரோடு பிடுங்கி எறியத்தான் வேண்டும்! ஆனால், “எந்தப் பயங்கரவாதியை! எந்தப் பயங்கரவாதி பிடுங்கியெறிவது?” என்பதுதான் இன்றைய நிலையில் கேள்விக் குறியாகவுள்ளது.**

அளவுக் கதிகமாகப் புகழாரம் பாடுபவர்கள் மீது, மிக அவதானமாக இரு~ பாம்பும் தீண்ட முன்பு அழகாகப் படமெடுக்கும்

ஔவை சரோஜா



# கொலஸ்ட்ரோலில் இருந்து...

## நம்மை நாம் பாதுகாப்போம்



கொலஸ்ட்ரோல் பிரச்சினைகள், நீரழிவுப் பிரச்சினைகள் இன்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் அதிரடி நோயாகவே காணப்படுகிறது. இப்போதெல்லாம் ஒருவரிடம் எப்படி? சுகமாக இருக்கிறீங்களா? என்று கேட்டால், “ஐயோ! அதேன் கேக்கிறீங்க, சீனிவியாதி, கொலஸ்ட்ரோல் வியாதி குடும்ப வியாதியா இருக்கு என்று கூறி ஆதங்கப்படுகிறார்கள்.

யாராவது இறந்து விட்டால், எப்படி இறந்தார் என்றுகேட்குமிடத்து 80% மானோரின் பதில் நெஞ்சடைப்பு, கிட்னிபெயில்டியர், பாரிசவாதம் என்று பதில்வரும். சீனி வியாதி உள்ள ஐம்பது வயதிற்கு மேற்பட்டோர்க்கு கால்களை வெட்டும் நிலை, சிறிய புண்கூட பெரிய புண்ணாகி வேதனை அளிக்கிறது.

இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்வதற்கு முன்னெச்சரிக்கை இன்றியமையாதது. அனேகமானோர் தமக்கு இப்பிரச்சினை இருப்பதை முன்கூட்டியே அறியாமல் கட்டுப்பாடற்ற உணவு முறைகளைக் கடைப்பிடித்து **“உருசியே உலகம்”** என்று இருந்து விட்டு, நோய் முற்றியதும் தடுமாறுவார்கள்.

கொலஸ்ட்ரோல் உங்கள் இரத்தத்தில் அதிகரித்தால்,

பக்கவாதம்
மாரடைப்பு
போன்ற கடுமையான நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

அதேபோல

சிறுநீரக நோய்கள்
கண்பார்வை பாதிப்பு
போன்ற பாதிப்புக்களும் தலைதூக்கலாம்.

கொலஸ்ட்ரோலும் ஏனைய கொழுப்புக்களும் இரத்த நாடிகளின் சுவர்களில் உட்புறமாகப் படிவதால், குருதிக்குழாயின் உள்சுற்றளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து இரத்தம் பாய்வதில் தடையை ஏற்படுத்துகிறது. இதனால், சில இடங்களில் குருதி உறைந்து, குருதியோட்டத்தில் தடையை ஏற்படுத்துகிறது.

இவ்வாறான நிலைமைகள் காரணமாகவே, இருதய நோய்கள், சிறுநீரக நோய்கள், பக்கவாதம் போன்ற ஆபத்துக்கள் ஏற்படுகின்றன.

வருமுன் காப்போனாகத்திகழ, முதலில் கொலஸ்ரோல், நீரிழிவு பற்றிய முன்னறிவை அனைவரும் பெற்றிருப்பது அவசியம். அத்துடன் அதனைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது வயதானவர்களுக்கான பிரச்சினை என்று மட்டும் எண்ண வேண்டாம். நடுத்தர வயதினரையும் இது பாதிக்கிறது. அது மட்டுமல்ல சீரான உணவுக் கட்டுப்பாடின்மையால் குழந்தைப் பருவத்திலேயே இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவது ஆரம்பமாகி விடுவதால், இளம் வயதி லேயே முன்னெச்சரிக்கையுடன் நடப்பதற்கு முயற்சி எடுப்பது அவசியம்.

## கொலஸ்ரோல் என்பது என்ன?

இது உடலுக்குத் தேவையான பொருள். ஆனால், "**அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**" என்பதை மறந்து விடக்கூடாது. எனவே கொலஸ்ரோல் கூடினால் நோய்கள் தலைதூக்கும். கொலஸ்ரோல் தவிர்ந்த வேறு கொழுப்புகளும் எமது உடலில் உண்டு. கொலஸ்ரோல் ரைகிளி சரைட்டு (TG) பொஸ்போ லிப்பிட்ஸ் ஆகிய அனைத்துமே கொழுப் புக்கள்தான். கொழுப்புகள் நீரிற் கரையாது. எனவே அவற்றை வேறு பகுதிக்கு எடுத்துச் செல்ல குருதியால் முடியாது. இதனால் இவை ஒரு வகைப் புரதத்துடன் இணைந்து கொள்வதால், நீரில் கரையக் கூடிய தாகின்றன. இப்புரதம் "லைப்போ" புரதம் (Lipoproteins) எனப்படுகிறது.

லைபோ புரதத்தில் இரு வகைகள் உண்டு அவையான.
உயர் அடர்த்தி லைப்போ புரதம் (HDL)
குறை அடர்த்தி லைப்போ புரதம் (LDL)
இப்போது அதிகுறைந்த அடர்த்தி லைப்போப்புரதம் (VLDL) என்பதும் இப்பொழுது அளவிடப்படுகிறது.

எல்லாக் கொழுப்புகளும் ஆபத்தானவையல்ல. HDL எனப்படுவது இரத்தத்தில் உள்ள கொலஸ்ரோலை வெளியேற்ற உதவுகிறது. நாடிக



ளின் சுவர்களில் கொழுப்புப் படிவதைத் தடுக்கிறது. எனவேதான் HDL என்பது நல்ல கொலஸ்ரோல் எனப்படுகிறது.

குறை அடர்த்தி லைப்போ புரதம் (LDL) என்பது, எமது உடலுக் குள் வரும் கொலஸ்ரோலைக் குறிக்கின்றது. எனவே இது அதிக ரிப்பது நல்லதல்ல. VLDL கொலஸ்ரோல் என்பது குருதியில் ரைக்கிளி சரைட் கடத்தப்படுவதற்கு உதவுகிறது. இது அதிகரிப்பது நல்லதல்ல.

எனவேதான் இரத்தத்தில் மாறுபட்ட கொழுப்பின் அளவுகள் பரிசோதிக்கப்படுகின்றது.

## இரத்தத்தில் கொழுப்பின் அளவு அதிகரிப்பதை எவ்வாறு அறியலாம்?

ஒருவரிடம் காணப்படும் குணங்குறிகள் மூலம் வைத்தியர்கள் இனங்கண்டு கூறுவார்கள். சிலரின் தோல்களில் மஞ்சள் நிறமான தடிப்புக் கள் காணப்படும். கண்களின் கீழ், முழங்கை, முழங்கால், தசைநார்கள் போன்ற இடங்களில் இத்தகைய மஞ்சள் நிறமான தோற்தடிப்புகள் காணப்படலாம்.

சிலருக்கு ஈரல், மண்ணீரல் ஆகியன சற்றுப் பருத்திருக்கும். வேறு சிலருக்கு கருவிழியைச் சுற்றி வெண்ணிற வளையம் காணப்படலாம்.

பெரும்பாலானவர்களுக்கு, இவ்வாறான அறிகுறி எதுவுமே இருப்ப தில்லை. எனவே இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் மட்டுமே கண்டு பிடிக்கலாம்.

10 - 12 மணித்தியாலங்கள் உணவு மற்றும் நீராகாரம் எடுக்காது, வெறும் வயிற்றில் இப்பரிசோதனையைச் செய்து நிலைமையை அறியலாம்.

இப்பரிசோதனை இரண்டு வகையில் இடம்பெறும்.
1. Serum Cholesterol
2. Lipid Profile
Serum Cholesterol குருதியிலுள்ள கொலஸ்ரோலின் அளவை மட்டும் காட்டும்.
மாறாக Lipid Profile குருதியில் உள்ள வெவ்வேறு கொழுப்பு களின் அளவைத் தனித்தனியாகக் காட்டும். விரிவான பரிசோதனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதுவே விரும்பத்தக்கதாகும். இதன்மூலம் HDL, LDL, TG VLDL, Cholesterol Total போன்றவற்றை அறியலாம்.

35 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும், 45 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் இப்பரிசோதனையைச் செய்வது விரும்பத்தக்கதே.

பின்வருவோர் கட்டாயம் கொலஸ்ரோல் பரிசோதனை செய்ய வேண்டும்.

1. உயர் இரத்த அழுத்தம் உள்ளோர்
2. நீரிழிவு நோயாளிகள்.
3. சிறுநீரக வழுவல் (Renal Failure) உள்ளோர்.
4. இருதய நாடி, அல்லது மூளை நாடி நோயுள்ளோர்
5. தமது இரத்த உறவுகளில் இருதயநாடி அல்லது மூளைநாடி நோயுள்ளோர்.
6. உடல் பருத்துள்ளோர்.
7. புகைப்பிடிப்போர்.
8. உடல் உழைப்பற்ற தொழில் செய்வோர்.
9. மாதவிடாய் முற்றாக நின்ற பெண்கள்.

மேற்கண்டோர் வயது வேறுபாடின்றி இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

தொடரும்......

நீரிழிவுப் போதகர்
இந்திய நீரிழிவுச் சங்கம்.

**"புகையில்லாமல் நெருப்பு வராது" என்பார்கள். ஆனால் முகிற் கூட்டங்கள் புகை போன்றே காணப்படும். அங்கே நெருப்பில் லையே. வதந்திகளைக் கேட்டுச் சோரம் போகாதீர்கள்.**

ஔவை சரோஜா



# உண்மையை உள்ளபடி உரைக்கும் எழுத்தாளர் நிலைமை....

சு. நிலவாணி



"தஸ்லிமா நஸ்ரீன்" பிரபல்ய எழுத்தாளர். பங்காளதேஷின் மேமன்சிங் என்ற இடத்தில் 1962 ஒகஸ்ட் 25இல் பிறந்தவர்தான் இவர். பெண்நிலை வாதத்தை உரத்துப் பேசியதில் ஆதரவுகளையும் எதிர்ப்புக்களையும் சரிவரச் சம்பாதித்துக் கொண்டார். 1992 இல் "நபசித்ரா" கட்டுரைத் தொகுதிக்காக "ஆனந்த்புரஸ்கார்" விருது பெற்றவர்.

வங்கமொழியில் இவரால் எழுதப்பட்ட "லஜ்ஜா" என்ற நாவல் பரபரப்பான அரசியலில் சிக்குண்டது. அவரது தலைக்கு விலைவைக்கப்பட்டது. தப்பிப் பிழைத்து. தற்போது மேற்கில் வாழ்கிறார்.

மறைபொருளேதுமின்றி பெண்ணிலைவாதம் பேசியுள்ள இவரது கவிதைகள் உலகெங்கிலும், பிரபல்யம் அடைந்துள்ளன, ஜமுனா ராஜேந்திரனால் மொழிபெயர்க்கப்பட்ட தஸ்லிமாவின் கவிதை வருமாறு.

## குறைந்த விலை சரக்கு

சந்தையில் குறைந்த விலைக்கு
விற்கப்படும் சரக்கு
பெண்போல் வேறேதும் இல்லை
தங்கள் கால் கைக்குப் பூச
ஒரு போத்தல் வாசனைத் திரவியம்
கிடைத்தால் போதும்,
மூன்று நாட்கள்.
சந்தோசத்தில் தூக்கமின்றித்
தவிப்பார்கள்
தங்களது மேனிக்குத் தேய்க்க
தமது கேசத்துக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுமண திரவம் கிடைத்தாற்போதும்
அவர்கள்
அடிமைகள்போல் ஆவார்கள்
தமது சதைகளைக் கூறுபோட்டு
உண்ணிகளின் சந்தையில்
வாரம் இரு முறை விற்பார்கள்.
தமக்கு மூக்குத்தி கிடைத்தால்,
எழுது நாள் வரையிலும்
பாதத்தை நக்கிக் கிடப்பார்கள்.
விலகும் சேலை கிடைத்தால்
முழு மூன்றரை மாதமும்
படுத்துக் கிடப்பார்கள்.
வீட்டுப் பிராணியாவது
அவ்வப்போது கத்தும்
ஆனால் பெண்ணின் உதடுகள்மீது
பூட்டுப் போடப்பட்டிருக்கும்
தங்கப் பூட்டு.

ஞ ஞ ஞ ஞ ஞ ஞ ஞ

பொறாமையை வழிப்படுத்தத் தவறினால்,
அது உனது வாழ்க்கையை நரகமாக்கி
விடும்.

ஔவை சரோஜா,

வறுமை, நோய், துன்பம், தொழில்,
செல்வநிலையாவும் அவன்கருவில் இருக்கும்
போது விதிக்கப்பட்டவை ஆகும்.

சாணக்கியன்

பொறாமைக்காரர்களையிட்டு மிக ஜாக்கிரதையாக இரு
நஞ்சைவிட இவர்களது நாசம் பெரியது.



சோதிடம்

# முதலாம் எண்களிற் பிறந்தோர்

**"எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்று ஔவையார் ஆத்திசூடியில் கூறியுள்ளார்.

திருவள்ளுவரோ-

**எண்ணென்ப ஏனை எழுத் தென்பஇவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"** என்று எண்களின் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் உலகிற்கு உணர்த்தியுள்ளார்கள் எண்சோதிடர்கள். எண்சோதிடத்தின் முன்னோடி "சீரோ" என்ற மேதையாவார்.

எண்களின் வலிமை பெருமைகளைத் தெளிவாகவும், விளக்க மாகவும் முன்னய சஞ்சிகைகளிற் கூறியுள்ளேன். உலகப் பணக்காரர் களையே, எண்களை அடிப்படையாகக் கொண்டே மதிப்பீடு செய்கிறார்கள். ஆம்! அவர்களின் மொத்தச் சொத்துக்களின் ஒட்டு மொத்தப் பெறுமதியை, எண்களைக் கொண்டே பணப்பெறுமதியிற் கூறுவார்கள். கோடிக்கணக்கான சொத்துக்களை முறையாகக் கூறியிருப்பது எண்கள்தானே?

ஒருவரது பிறந்த திகதியையும், வருடம், மாதம், திகதியைக் கூட்டிவரும் எண்ணை மட்டும் வைத்துக் கொண்டு வாழ்க்கையை எடை போட முடியாது. சோதிடம் ஒரு ஆழ்கடல் பலகோணங்களில் ஆராயப்பட வேண்டியது. ஒரு கோப்பைக் கடல்நீரை எடுத்து, இதுதான் கடல் என்று காட்ட முடியாது.

எனவே உங்களை ஆளும் எண்களை முதலிற் கண்டுபிடிக்க வேண்டும். எண்கள் ஆக மொத்தம் 1 தொடக்கம் 9 வரைதான் உண்டு. அத்துடன் 0 (பூச்சியமும்) சேர்ந்துதான் சகல எண்களும் உருவாக்கப் பட்டுள்ளது. உ+ம் 6851 - இங்கு 6, 8, 5, 1 சேர்ந்து பெறுமதியாக மாறுகிறது. எனவே நாம் எம்மைப் பற்றி சரியாக எப்படி இனங்காண்பது?

உ+ மாக

உலகத்தில் மகா கோடீஸ்வரராக 12 ஆண்டுகள் தொடர்ச்சியாக சாதனை படைத்தவரும், கணினித் தொழிற்பாட்டில் புரட்சியை ஏற்படுத்திய வருமான பில்கேட்ஸ் அவர்களின் பிறப்பு எண் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்கேட்ஸ் பிறப்பு 28-10-1956

| | கிரக நிலை | | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் - | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் - | 2 | சந்திரன் | மென்மை | |
| வருட எண் - | 4 | இராகு | பகை | |
| விதி எண் - | 5 | புதன் | தோழமை | |
| விளைவுஎண் - | 3 | குரு | போதனை | |

இவரை ஆளும் முக்கிய எண் விளைவாகிய 3 ஆகும். இவ் வெண்ணுக்குரியவர் குரு (வியாழன்) குரு தனகாரகன் - புகழ்ச்சிக்கு அதிபதி. அறிவிற்கு நல் ஆசான். விதி எண் 5 இதன் அதிபதி புதன் வித்தைக்காரகன். நல்லவிவேகி, திகதி எண் 1 சூரியனைக் குறிக்கிறது. ஆக,

சூரியன் - புதன் - குரு ஆகிய கிரகங்களின் பலன்கள் இவருக்குண்டு. அத்துடன் பெயர் எண், வாழும் ஊரின் எண், வீட்டிலக்கம், மனைவி, பிள்ளைகளின் இலக்கம் என்பனவும் வேலை செய்யும்.

1. **திகதி எண் காண்பது திகதியை மட்டும் கூட்டி வருவது**
   $2 + 8 = 10 = 1$

2. **மாத எண் = திகதி + மாதம்**
   $28 + 10 = 2$

3. **வருடஎண் = திகதி + வருடம்**
   $28 + 1956 = 4$

4. **விதி எண் = திகதி + மாதம் + வருடம்**
   $28 + 10 + 1956 = 5$

விளைவு எண் = ஏற்கனவே கணித்த திகதி எண், மாத எண், விதி எண், வருடஎண், என்பவற்றைக்கூட்டி வருவது, 1+2+4+5= 3

எல்லோருக்கும் விளைவு எண்தான் முக்கியம். இங்கு "பில்கேட்ஸ்" குருவின் ஆதிக்கத்தினாற்தான் பிரபல்யம் அடைந்துள்ளார். விதி எண் 5 (புதன்) அதற்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளது, திகதிஎண் 1 சூரியனும் அதற்குச் சாதகமாகவே அமைந்து விட்டது. இவருக்கு குருவின் ஆதிக்கம் மிகப் பலமாகக் காணப்படுவதால் உலகப் பணக்காரரானார்.



எழுத்துலகம், முழுவதுமே பரபரப்பாகப் பேசப்பட்ட ஒருவர் "**சாத்தானின் கவிதைகள்**" என்ற நூலை எழுதியதால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் இங்கிலாந்து அரசு இவருக்கு "சார்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அவர்தான்,

**சல்மன்ருஷ்டி பிறப்பு 19-07-1947**

| | | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 8 | சனி | வேதனை | |
| வருட எண் | 4 | இராகு | பகை | |
| விதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| விளைவுஎண் | 6 | சுக்கிரன் | ரசனை | |

1,2,6 இவரது இலக்கங்கள். சந்திரன், கற்பனா சக்தியைக் கொடுப்பவர். 6 சுக்கிரன் கலைகளின் அரசன். எனவே எழுத்துத் துறையில் பிரகாசித்துள்ளார். இங்கு 6 விளைவே முக்கியமானது என்பதை அறிக. 2 (சந்திரன்) சகட ஓட்டமான வாழ்க்கை அமையும்.

**உலக அழகி நடிகை ஐஸ்வர்யா ராய்**

பிறப்பு 1 - 11 - 1973

**38 வயதில் "எந்திரன்" படத்தில் கதாநாயகியாக நடித்தார்.**

| | | கிரகநிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 3 | குரு | போதனை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | |
| விதிஎண் | 5 | புதன் | தோழமை | |
| விளைவுஎண் | 3 | குரு | போதனை | |

1 - 5 - 3 என்ற அமைப்பையுடையவர் இவர் உலகப் பிரசித்தி அடையக் காரணம். விளைவான வியாழனே (குரு) ஆகும் 5 புதன் தோழமை அனேக ரசிகர்களைத் தேடித்தந்தது.

**உலகில் அதிகம் தேடப்பட்ட முதல் தீவிரவாதி அமெரிக்கர்களைக், கிழி அடைய வைத்தவர். ஒசாமாபின்லேடன், உலகின் கவனத்தை அதிகம் ஈர்த்தவர் இவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒசாமா பின்லேடன் 10 - 03 - 1957**

| | | கிரகநிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| மாத எண் | 4 | இராகு | பகை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| விதிஎண் | 8 | சனி | வேதனை | |
| விளைவுஎண் | 9 | செவ்வாய் | சாதனை | |

1 - 8 - 9 விளைவு முக்கியமானது. 9 செவ்வாய். பயப்படாது. யுத்தம் செய்து சாதனை படைக்கும், (8) சனி அதுவும் இணைந்தால் கேட்கவா வேண்டும் தீவிரந்தான், 8ம் எண்காரர்கள் அகாலமரணமே அடைவார்கள். ஆயுதத்தால் அல்லது விபத்தினால், அல்லது நஞ்சினால், இவர் 54வது வயதில் இறந்தார். 5 + 4 = 9 விளைவு எண் வரும் வயதில் இறந்துள்ளார்.

**சதாம் உசேன்: ஈராக் நாட்டுச் சர்வாதிகாரி. உலகிற் பிடிபட்டு தூக்கிலடப்பட்ட முதற் சர்வாதிகாரி இவரே.**

28 - 4 - 1937

| | | கிரகநிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| விதிஎண் | 7 | கேது | சோதனை | |
| விளைவுஎண் | 7 | கேது | சோதனை | |

1, 7, 7 இவரது அமைப்பு சூரியன், கேது, கேது இறுதியில் இவரது வாழ்க்கை சோதனையானது. **இவரது வாழ்வில் "நிலையாமை ஒன்றே, நிலையானது". என்றாகி விட்டது.**

**வின்ஸ்டன் சேச்சில்:** 01.12.1874 பூகழ்பூத்த பிரிட்டன் பிரதமர்

| | | கிரகநிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| மாத எண் | 4 | ராகு | பகை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| விதிஎண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவுஎண் | 5 | புதன் | தோழமை | |

இவர் 1, 6, 5 போன்ற எண் ஆதிக்ககாரராவார். சூரியன்-சுக்கிரன் - புதன் என்னும் கிரகங்களால் ஆழப்படுகிறார்.



இப்போது அவதானித்தீர்களா? 1ம் இலக்கத்திற் பிறந்தாலும், விதி எண், விளைவுஎண், ஒவ்வொருவருக்கும் வேறுபட்டே காணப்படுகிறது. எனவே முக்கியமான இந்த மூன்று எண்களின் பலன்களையும், குணாம்சங்களையும் இவர்கள் கொண்டிருப்பார்கள் எனவே நீங்களும் எந்தெந்த எண்களால் ஆழப்படுகிறீர்கள் என்று எடைபோட்டுக் கொள்ளுங்கள். 1, 10, 19, 28 திகதிகளிற் பிறப்போர்க்கு முதலாம் எண்ணின் தாக்கம் மட்டுமே காணப்படும் என்ற கருத்து மிகப் பிழையானதே. விதி எண்ணையும், விளைவெண்ணையும் ஆராயுங்கள்.

**அனேக உண்மைகளை உணர்வீர்கள்.**

## ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincon) 1809-1865

அமெரிக்காவின் கென்டக்கி மாநிலத்தில் 1809 பெப்ரவரி 12ல் பிறந்தார்.

1835ல் வழக்கறிஞரானார்.

1842ல் மேரிடாட் (Mary todd) என்ற பெண்ணை மணந்தார்.

1862 ல் நீக்ரோ மக்களை அடிமைகளாச் சந்தையில் விற்றார்களாம். அந்தக் கொடுமையை இல்லாதொழித்த பெருமை ஆபிரகாம் லிங்கனைத் தான் சாரும். இவர் 16வது குடியரசுத் தலைவராவார்.

1865 ஏப்ரல் 14ம் திகதி ஆபிரகாம் லிங்கன் நாடகம் பார்த்துக் கொண் டிருந்த போது ஜோன் வில்க்ஸ் வூத் (John wilkes Booth) என்ற நடிகனாற் சுட்டுக் கொல்லப்பட்டார்.


## நெப்போலியன் (Neppolian)

ஐரோப்பாவை ஆட்டிப் படைத்த நெப்போலியன் 1814ம் ஆண்டு நடைபெற்ற போரில் தோல்விகண்டான். எதிரிகளிடம் சரண்புக விரும்பாத அவன் எப்போதுமே தன்னிடம் வைத்திருந்த நஞ்சை அருந்தினான். ஆனால் அவன் இறக்கவில்லை. காரணம் அந்த விசம் நாட்பட்டதால். தனது வீரியத்தை இழந்திருந்தது. அது வாந்தியாக வெளியேறிவிட்டது. பின்பு

வாட்லூ போர் நடைபெற்றது. அதில் தோல்வி கண்ட நெப்போலி யன்! ஹெலினா தீவில் சிறை வைக்கப்பட்டு தனது 52வது வயதில் நோய்வாய்ப்பட்டு இறந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரி......... சிரி........ சிரி.......

பஸ்டிரைவர்: இப்ப இந்த உலகம் மிச்சங்கெட்டுப் போச்சு நேற்று வயதுபோன பெரியவர் ஒருவர் நிக்கேலாம அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். நான் சொன்னன் யாராவது எழும்பி இடங்குடுங்க எண்டு ஒருவருமே அசையல்ல.....

மற்றவர்: பிறகு என்ன நடந்தது?

பஸ்டிரைவர்: பிறகென்ன நான் எழும்பீற்று இடத்தைக் குடுத்திட்டன். அதுக்கு ஒருவன் என்ன சொன்னான் தெரியுமா?

மற்றவர்: சொன்னாத்தானே தெரியும்

பஸ்டிரைவர்: இவர்தான் ஒரே "டிக்கட்" எடுக்காம ஓசியில பிரயாணம் செய்யிறவர், இண்டைக்காவது பெரியவருக்குக் குடுக்கட்டுமே.

---

ஒருவர்: யார் நீங்க?

மற்றவர்: பிச்ச வாங்க வந்தநான்

மற்றவர்: என்ன இவ்வளவு ரிப்டொப்பா "ரை" எல்லாம் கட்டி நீற்றா இருக்கிறீங்களே

மற்றவர்: ஓ! அதுவா நான் குருபக்தி உள்ளவன். குரு சொல்லித் தந்தது போல **"இரக்கப் போனாலும் சிறக்கப்போ"** என்பதை பின்பற்றுறன்.

---

தந்தை: குலமானத்தைப் பறக்க விட்டிட்டியே பாவி, நீ எனர மகனில்ல.

மகன்: அப்பா! அண்ணா கனடாக்கு பிளேனில பறந்ததால தானே உங்களுக்குப் பணம் வருகுது.



நான் மட்டும் மானத்தைப் பறக்க விட்டால் மட்டும் கத்திறியள் நீங்கள் மட்டும் அண்ணனைப் பறக்க விடலாமா? சரியான கட்டி அப்பா நீங்க.

---

ஒருவர்: ஆ!..... ஏண்டா பாவி அவனக் கத்தியால குத்திக் சொலை செய்தநீ?

மற்றவர்: எனக்கு துப்பாக்கி ஒன்று கிடைக்காமற் போச்சு அதுதான் இருப்பதைக் கொண்டு திருப்தி கொண்டநான்.

---

மனைவி: உங்களிற்ற கொஞ்சம் கூட இரக்கமே கிடையாது.... "பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பார்கள் ஆனால் நீங்க?.....

கணவர்: அடியே! இரத்த பாசம் இரங்கத்தானே செய்யும், தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் அல்லவா?

---

நிருபர்: இவ்வளவு அழகாக நடிப்பின் உச்சியில் கொடிகட்டிப் பறக்கும் உங்கட வயதென்ன?

நடிகை: இருபத் தொண்டு (21)

நிருபர்: இச்.... இச்.. நான் மடையன் என்று (தலையிற் தட்டுகிறார்)

நடிகை: ஏன் சேர் தப்பாச் சொல்லிற்றேனா?

நிருபர்: நான்தான் தப்புப்பண்ணீற்றன்! இந்தக் கேள்விய 30 வருசங்களுக்கு முன்னமே கேட்டிருக்கவேணும்.

---

ஆசிரியர்: ராஜா! எங்கே இந்தப் பழமொழியை முடி பார்க்கலாம். "ஒரு பானைச் சோற்றுக்கு......

மாணவன்: ஒரு சட்டிக் கறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: மச்சான்! அந்த நாய் எங்களப் பார்த்து குலைத்துக்கொண்டு வருகிது கதவ மூடடா.

மற்றவர்: அடே நீ ஐஞ்சாமாண்டு கொலசிப்பில படிக்கல்லையே? **"குலைக்கிற நாய் கடிக்காதெண்டு"**

நண்பன்: அது சரி மச்சான் நானும், நீயும் அதப் படிச்சிருக்கம். நாய் அதப் படிச்சிருக்க வேணுமே.

ஒருவர்: மனித நேயமென்றால் என்ன?

அறிஞர்: "ஒருவர் ஆபத்தில் இருக்கும்போது மனமுவந்து உதவி செய்தல்"

ஒருவர்: அது மிகவும் அவசியமா?

அறிஞர்: அப்படி உதவி செய்யாதவன் மனிதனில்லை

ஒருவர்: அப்படி என்றால், கடன்காரன் எனக்குக் கஸ்ட்ந் தாறான் பொறுக்க முடியல்ல, ஒரு 10,000 ரூபா தாறீங்களா? உதவியா இருக்கும்.

சிரிக்கவும் சிந்திக்கவும்

"பிறந்தநாள் காணும் பெரியவரே, நீங்கள் வாழ்க பல்லாண்டு" இப்படி ஒரு போஸ்டரை ஒருவர் சுவரில் ஒட்டிக் கொண்டிருந்தார்.

வந்தவர்: நீங்கள் பிறந்தநாள் வாழ்த்தை, நேரிற் சென்று கூறலாமே, இங்கு இப்படி ஒட்டுவது அந்தப் பெரியார்க்குத் தெரியுமா?

ஒட்டியவர்: தெரியும்

வந்தவர்: எப்படித் தெரியும்?

ஒட்டியவர்: "அந்தப் பெரியவரே நான்தானே என்றார்"



# சாணக்கியர் பதிலளிக்கிறார்

1. சாணக்கியரே! எனது பலகோடி வணக்கங்கள்
ஆ. ரவிச்சந்திரன்
மட்டக்களப்பு

கேள்வி: திருமணம் செய்து கொள்வது நல்லதா? செய்யாமல் இருப்பது நல்லதா?

பதில்: இரண்டில் எதைச் செய்தாலும் நீங்கள் வருத்தப்படப் போகிறீர்கள்.

2. சாணக்கியரே! வணக்கம்
ச. முரளீதரன்
திருகோணமலை

கேள்வி: ஒரு தொழிலை வெற்றிகரமாக நடத்த எது மிகவும் முக்கிய மானது என்று கருதுகிறீர்கள் **மூலதனமா**? **தொழிலாளியா**? **மூளையா**?

பதில்: **முக்காலிக்கு எந்தக்கால் முக்கியமானது**? உங்கள் விடையிற்தான் எனது பதில் இருக்கிறது.

3. ஐயா! சாணக்கியரே பணிவான வணக்கம்
எம். காண்டீபன்
யாழ்ப்பாணம்

கேள்வி: புரட்சிக் கவிஞர் "பாரதிதாசன்" சர்வாதிகாரியான ஹிட்லரின் மீசையை ஏன் வைத்திருந்தார்?

பதில்: "தாய்நாடு" பத்திரிகை ஆசிரியர் ஒரு சமயம் பாவேந்தரிடம் இக்கேள்வியைக் கேட்டபோது அவர் கூறினார். **இது "ஹிட்லர் மீசை" என்று எவன் சொன்னான்? இந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீசைக்குப் பெயர் "சாலிசாப்ளின் மீசை"** புகழ்பெற்ற நடிகர் சாலிசாப்ளினின் தீவிர ரசிகனாக இருந்தவன் தான் ஹிட்லர் அதனாற்தான் சாப்ளின் போன்று மீசையை வைத்துக் கொண்டான். ஆனாலும் சாப்ளினுக்கோ ஹிட்லரின் பாசிசக் கொள்கை பிடிக்கவில்லை. அதனால் ஹிட்லரைக் கடுமையாக விமர்சனம் செய்து, "மாபெரும் சர்வாதிகாரி" என்ற படத்தையும் கூட நடித்து வெளியிட் டாராம் சாப்பிளின். இவற்றை சகிக்கமுடியாத ஹிட்லர், "சாப்ளினை எங்கே கண்டாலும் சுட்டுக் கொல்லும்படி" உத்தரவு பிறப்பித்தானாம். ஆனாலும் சாப்ளினின் மீசையை அவன் மாற்றிக் கொள்ளவில்லை. இதனாற்தான் **சாப்ளின் மீசை, ஹிட்லர் மீசையாக மாறியது** என்று விளக்க மளித்தாராம். பாவேந்தர் பாரதிதாசன்.

4. சாணக்கியரே! வணக்கம்
வி. விபுலன்
மட்டக்களப்பு

கேள்வி: ஐயா! பிரதமர், டி.எம். ஜயரட்ன ஐயா அவர்களின் விபரத்தை இரத்தினச் சுருக்கமாகத் தருவீர்களா? தரலாமே!

பதில்: பெயர் - டி.எம். ஜயரட்ண
பிறப்பு 07- ஜுன் - 1931
வயது - 80
கல்வி கற்ற கல்லூரி தொலுவ மகாவித்தியாலயம், கம்பளை
மதம் - பௌத்தம்
பிள்ளைகள் - இரண்டு
கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
மாவட்டம் - கண்டிமாவட்டம்
வகித்த பதவிகள் - தொலுவ மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினார். 1960 - 1962 ஆம் ஆண்டு வரை தபால் அதிபராக தொலுவவில் கடமையாற்றினார்.



**அரசியற் பிரவேசம்**

1951ம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டார நாயக்காவின், காலத்தில் முதல் முதலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்டார். 1970ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முதன்முதலில் நாடாளு மன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்

வகித்த அமைச்சுப் பதவிகள்-

1. உணவு, கூட்டுறவு மற்றும் விவசாயத்துறை அமைச்சராக
2. உணவு, கூட்டுறவு மற்றும் விவசாயத்துறை அமைச்சர் (1994 - 2001) மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.
3. தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் (2004 - 2005)
4. தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் (2005 - 2007)
5. பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் (2007 - 2010)

**5.** சாணக்கிய மேதையே! எனது வணக்கங்கள் பலகோடி - எனது வினா:- இப்போது புதிய உலக அதிசயங்கள் எவை? தயவு செய்து அறியத்தருவீர்களா?

வ. வால்மிகிராஜ்
கொழும்பு

பதில்:- தாராளமாகத் தரலாமே, புதிய உலக அதிசயங்கள் 7 (The new 7 wonders of the world) உலகில் ஆயிரக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயங்களாக எவற்றைக் கருதலாம் என்ற வாக்கெடுப்பு ஒன்று நீண்ட காலமாக உலகமக்களிடையே நடத்தப்பட்டு வந்தது யாவரும் அறிந்த விடயமே.

இதற்காக 2001 ஆம் ஆண்டு "New seven wonders" என்னும் அமைப்பு நிறுவப்பட்டது. அந்த அமைப்பானது பல்வேறு ஊடகங்கள் வாயிலாக மக்களிடையே பிரசாரம் செய்து எவற்றையெல்லாம் புதிய "ஏழு" உலக அதிசயப் பட்டியலில் சேர்க்கலாம்? என்ற கணக்கெடுப்பொன்றைத் தொடங்கியது.

தெரிவு செய்யப்பட்ட ஏராளமான இடங்களில் இருந்து 2005 ஆம் ஆண்டு 77 இடங்கள் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் அடுத்தகட்டவாக்கெடுப்பு தயாரானது.

பின்னர் 2006 ஆம் ஆண்டு முன்னணியில் இருந்த 21 இடங்கள் தெரிவு செய்யப்பட்டது.

பின்னர் அதிலிருந்து. ஏழு (7) அதிசயங்கள் 2007 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 7ஆம் திகதி வெளியிடப்பட்டது அன்றைய தினத்தை முடிவை அறிவிப்பதற்காக தெரிவு செய்தகாரணம். இலக்கத்தில் எழுதினால் 07-07-07 என்று வரும் எனவே அன்றைய தினம் 7 அதிசயங்களுக்காக கனகச்சிதமாகவே தெரிவு செய்யப் பட்டுள்ளது.

**புதிய உலக அதிசயங்கள் இவை தான்.**

**1. தாஜ்மஹால் (The Taj mahal in Agra India)** அனைவரும் அறிந்த உலக காதல் சின்னம். இது இந்தியாவில் ஆக்கிரா மாநிலத்தில் அமைந்துள்ளது.

2. **சீனப் பெருஞ்சுவர்** ( The Great wall of china) இது சீனாவை எதிரிகளிடமிருந்து காப்பதற்காகக் கட்டப்பட்ட மிக நீளமான மதில் 6400 கிலோமீற்றர் நீளமான இந்த மதிலைக் கட்டிமுடிக்க, பல இலட்சக்கணக்கான மனிதர்கள் உழைத்திருக்கிறார்கள். அதில்



ஆயிரக் கணக்கானோர் உயிரையும் இழந்துள்ளார்கள் விண்வெளி சென்ற வீரர்களுக்கு இறுதியிற் கண்ணிற் தெரிந்து மறைந்தது இந்தப் பெருஞ்சுவரே.

3. **சிட்சென் இட்சா பிரமிட்** (The Kukulkan Pyramid of chichen Ifza mexico) மெக்ஸிக்கோவின் மாநிலமான யுகட்டானில் அமைந்துள்ள பிரமிட் இது சதுரவடிவ தளங்களைக் கொண்ட படிக்கட்டுகளுடனான பிரமிட் இதுமாயன் நாகரிகத்தில் உருவான கட்டடம் இது

4. **மச்சு பிச்சு** (The Machu Picchu in Cuzco, Peru) பெரு (peru) நாட்டில் கடல் மட்டத்திற்கு மேல் 2,350 மீற்றர் உயரத்திலுள்ள நகரம் இது அமேசன் காட்டுப்பகுதியால் மறைக்கப்பட்டிருந்த இந்தப் புராண நகரம் 1911இல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

5. **பெட்ரா**( The Petra in Jordan) ஜோர்தானிலுள்ள மிகப்புராதன நகரம் வியத்தகு கட்டட வேலைப்பாடுகள் மிக்க இந்த நகரத்திற்கு 9000 வருடங்களுக்கு மேலிருக்கும் வயது.

6. **கிறைஸ்ட் ரீடீமர்** (Christ the Redeemer in Rio de Janeiro Brazil) பிறேசிலின் கொர்கவாடோ மலை முகட்டில் எழுப்பப்பட்டிருக்கும் 38 மீற்றர் உயரமுடைய இயேசு கிறீஸ்துவின் உருவச்சிலை இது வாகும்.

7. **கொலிசியம்** ( Colosseum in Rome Italy) உல்லாசப்பிராணிகளைக் கவரும் இத்தாலியின் மிக முக்கியபுராதனக் கட்டிடங்களில் ஒன்று 48 மீற்றர் உயரம் 188 மீற்றர் நீளம் கொண்ட விளையாட்டு மைதானம் இது 10,000 பார்வையாளர்களை உள்ளடக்கத்தக்தாக அமைக்கப் பட்டுள்ளது.

6. சாணக்கிய பெருந்தகையே! எனது பணிவான வணக்கம், சாணக்கியன் சஞ்சிகை மூலம் பல்வேறு பட்ட அறிவுகளைப் பெற்று வருகிறேன் எனது அன்பான நன்றிகள் முதலில்.

வினா: முதலில் இருந்து வாசித்தாலும், இறுதியில் இருந்து வாசித்தாலும் ஒரே உச்சரிப்பைத் தரும் சொற்களையும், அதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களையும் தயவு செய்து தாருங்கள்.

ஏ. மலர்விழி
திருகோணமலை

பதில் :-

கடுக- விரைவாய்

குடகு- குடாநாடு

குருகு - குட்டி, குருத்து, வெண்மை, நாரை, கறவை, கோழி,பறவை, கொல்லன், உலைமூக்கு, கைவளை, குருக்கத்தி, கல்லாலமரம்.

குழகு - இளமை, அழகு, குழந்தை

குளகு - இலைக்கறி, குறிஞ்சி நில மகளிர் அணியும் உடை, விலங்கின் தழையுணவு

குறுகு - குள்ளமாகு, சிறுகு, நெருங்கிச்செல்.

சிச்சி - இகழ்ச்சி, வெறுப்பு உணர்ச்சிகளைக் காட்டும் குறிப்புமொழி.

தித்தி - இனிப்பாயிரு, தித்திப்பு, சிற்றூண்டி,

இன்பம் - தேமல், தாளச்சதி, குரங்கு, யாகக் குண்டம், ஒருவகை இசைக்குழல்.

திகதி - நாள் - தினம் - மாதத்தில் வரும் நாட்கள்

திதி - நிலைபேறு, காத்தல், இருத்தல், செல்வம்,கௌரவநிலை, சாஸ்திரப்படி நாள், அசுரரின்தாய், இறந்ததிதி சிரார்த்தம்,

பாப்பா - சிறு குழந்தை, பாவை, கண்ணின்கருவிழி



விகடகவி - நகைச்சுவைபாடல், நகைப்பு விளைவிப்பவன்

தாத்தா - பாட்டன், வயது முதிர்ந்தவர்

தாதா - தாருங்கள்.

* உங்கள் கேள்விகளை
கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்
சாணக்கியன்
1295/1 பாலையூற்று
திருகோணமலை

பொறாமையை வழிப்படுத்தத் தவறினால்,
பொல்லாப்பிற் கொண்டு போய் விடும்.

**விதியின் விசித்திர விளையாட்டு**

மாவீரன் நெப்போலியனை கடற்படை சண்டையில் தோற்கடித்தவர் இங்கிலாந்து நாட்டு கடற்படைத் தளபதியான நெல்சன் கி.பி 1758 ல் பிறந்த நெல்சன் இளம் வயதில் ஒல்லியாகவும் பலவீனமாகவும் காணப்பட்டவராம். இவர் அதிக நாட்கள் உயிரோடு இருக்க மாட்டார் என்று எல்லோரும் நினைத்தார்களாம். அத்துடன் ஒரு போரில் ஒரு கால்கூட நொண்டியானதாம். தன்னைத்தானே நம்பினார். மாவீரன் நெப்போலியனையே கைது செய்தார்.

சேற்றில் யானை விழுந்து விட்டால்!
சேற்றிலுள்ள தவளை கூட உதைக்குமாம்

சாணக்கியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சாணக்கியனின்" அறிவுப் பகிர்வுக்கு அன்பளிப்புச் செய்ய விரும்பும், அறிஞர்கள், மேதைகள், நலன்விரும்பிகள், (ஊக்கு விக்கும் கரங்கள்) தாங்கள் அன்பளிப்புச் செய்யும் தொகையை ஆசிரியரிடம் நேரிற் தரலாம்.**

**அல்லது**

**"இலங்கை வங்கி (நகரக்கிளை) பஷார் பிராஞ்ச் திருகோண மலை சேமிப்புக் கணக்கு இலக்கம் 1731217 வைப்பிலிடலாம். உங்கள் சேவைக்கு நன்றி.**

அல்லது

அஞ்சல் அலுவலகம் திருகோணமலையில் மாற்றக்கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

Post Office, Trincomalee - For money orders
Money orders in favours of Mr. A. Chandrasegaram

வாசகர் வட்டத்திற்கு உங்கள் காத்திரமான விமர்சனங்களை அனுப்பி வையுங்கள்.

**நீங்களும் உங்கள் தரமான ஆக்கங்களை**
**எமக்கு அனுப்புங்கள்**


செம்மையாக்கிய பின்பு பிரசுரிக்கப்படும்.
அனுப்ப வேண்டிய முகவரி

சாணக்கியன்
திருமதி. வயலற் சரோஜா,
1295/1,பாலையூற்று,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org